

# ரமணோதயம்

ஜூலை 2015
காலாண்டு

அருணை விஜய இதழ்
விலை ₹ 20



உள்ளதுஅலது உள்ள உணர்வு உள்ளதோ உள்ளபொருள்
உள்ளல்அற உள்ளத்தே உள்ளதால் - உள்ளம்எனும்
உள்ளபொருள் உள்ளல்எவன் உள்ளத்தே உள்ளபடி
உள்ளதே உள்ளல் உணர். - உள்ளது நாற்பது (மங்கல வெண்பா)

௦உள்ளதாகிய மெய்ப்பொருள் ஒன்று இருந்தாலன்றி, ‘இருக்கிறோம்’ என்னும் இருப்புணர்வு தோன்றுமா? அந்த சத்தியப்பொருள் மனத்தின் எண்ணங்கள் அற்ற இதயத்தில் இருப்பதால், இதயம் என்று கூறப்படும் அந்த உண்மைப் பொருளை தியானிப்பவன் எவன்? தியானிப்பது எப்படி? அது உள்ளத்தில் எவ்வாறு உள்ளதோ அவ்வாறு நாம் இதயத்தில் இருப்பதே அதை உண்மையாக தியானிப்பதாகும் என்று உணர்வாயாக.


# SRIPAD STEELS PVT. LTD.,

## Chennai

உதயம் 14 ஓம் நமோ பகவதே ஸ்ரீ ரமணாய மலர் 4

# ரமணோதயம்

நானுதியாதுள்ள நிலை நாமதுவாய் உள்ள நிலை

அருணை விஜய இதழ்

ஜூலை 2015

ஆசிரியர்: Dr. S. ராம் மோஹன்

- கட்டுரைகள், ஆண்டு சந்தா, விளம்பரங்கள் குறித்த அனைத்து கடிதத் தொடர்புகளுக்கும் ஸ்ரீ ரமண கேந்திர அலுவலக முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.
- கட்டுரைகளுக்கு சன்மானம் எதுவும் கொடுக்கப்பட மாட்டாது. பிரசுரமாகாத கட்டுரைகள் வேண்டுகோளின்பேரில் திருப்பி அனுப்பப்படும்.
- மற்றைய எழுத்தாளர்களின் கட்டுரைகளில் வெளிவரும் கருத்துகளுக்கு ஆசிரியர் பொறுப்பல்ல.

## சந்தா விவரங்கள்

ஆண்டு சந்தா: ₹ 75 தனி பிரதி: ₹ 20
ஆயுள் சந்தா: ₹ 1500

காசோலை/மணியார்டர் 'ரமணோதயம்' என்ற பெயரில் எடுத்து ரமண கேந்திரா டிரஸ்ட், 41, அலமேலுமங்காபுரம், மைலாப்பூர், சென்னை 600 004 என்ற முகவரிக்கு அனுப்பவும்

ரமணோதயம் தகவல் மற்றும் தொடர்புக்கு அணுகவும்:
குமார் ராஜா: 9444261296
மின்னஞ்சல்: arunamramanam@gmail.com
மேலாளர் கண்ணன்: 9940418375

வடிவமைப்பு: ஸ்ரீ ரமணாச்ரமம்

பதிப்பாளர் & அச்சிடுபவர்:
குமார் ராஜா, ரமண கேந்திரா டிரஸ்ட்
41, அலமேலுமங்காபுரம், சென்னை 600 004

உரிமை: ரமண கேந்திரா டிரஸ்ட், சென்னை 4
தொலைபேசி: 24611397

# பொருளடக்கம்

அருணை விஜய இதழ், ஜூலை 2015


| வ.எண் | பொருள் | | ப.எண் |
|---|---|---|---|
| 1 | ஆசிரியர் உரை | | 3 |
| 2 | புத்தர் | நொச்சூர் வெங்கடராமன் | 19 |
| 3 | இனிவரும் திருநாட்கள் | | 20 |
| 4 | பரோக்ஷத்திலிருந்து அபரோக்ஷத்திற்கு | பிர. கிரிதர ஜெகதீஷ் | 21 |
| 5 | மரணம் மதுரம் | சு. பரமேஸ்வரன் | 30 |
| 6 | கோபம்-சாபம் | ஆகுரா | 38 |
| 7 | ரிபுகீதை | தியாகராஜன் | 45 |
| 8 | பகவான் ரமணர் கண்ட தமிழ் வேதாந்த நூல்கள் | | 52 |
| 9 | அகம் புகுந்த அண்ணல் | சேலம் சேதுகுமாரன் | 59 |
| 10 | ரமண வழி வெண்பாக்கள் | க்ரேஸி மோகன் | 66 |
| 11 | நான் யார் தெரியுமாவிலிருந்து நான் யார் வரை | Dr.ஏ.வி.ராஜகோபாலன் | 69 |
| 12 | செய்திகள் | | 78 |

# ஆசிரியர் உரை

## பூட்டுகள் அனைத்திற்கும் ஓர் அற்புதச் சாவி

*நமது ஆன்மிக வரலாற்றில் ஓர் அழகிய நிகழ்ச்சி கூறப்படுகிறது. பகவானின் உபதேசமாகிய "நான் யார்?" என்பதை விளக்கும் வகையில் இது அமைந்துள்ளது. புத்த வரலாற்று நூல்களிலும் இச்சம்பவம் உள்ளது. மேற்கு இந்தியாவில் இருந்த நாகசேனர் என்ற துறவியினை மிலிந்தன் (மினான்பர் என்று கிரேக்க நூல்கள் கூறும்) என்ற அரசன் தன் அவைக்கு அழைத்து ஆசிபெற விழைந்தான். அவர் வாழ்ந்த வனக் குகைக்குச் சென்ற அமைச்சன் அவரிடம், "ஐயா! நாகசேனர் என்பது தாங்கள்தானே! தங்களை அரசவைக்கு அழைத்துவர மன்னர் மிலிந்தர் அனுப்பி வைத்தார். உங்களை அழைத்துவர இந்தத் தேரினையும் அனுப்பி உள்ளார்" என்றான்.*

*நாகசேனர், "நாகசேனர் என்று இங்கு ஒருவரும் இல்லையே! ஆயினும் என் வருகையை அரசர் விரும்பினால் இங்கேயே தேரை விட்டுச் செல்க" என்றார். மிகவும் குழப்பமடைந்த அமைச்சர் அவர் கூறியபடி தேரை அங்கேயே விட்டுச் சென்று, நடந்ததை அரசரிடம் கூறினான். அரசனோ மிகவும் வியப்படைந்தான்.*

*மாலை வந்தது; நாகசேனரும் அரசன் அரண்மனையை அடைந்தார். அரசன், வாயிலுக்கு வந்து, "நாகசேனரே! உங்களை நான் வரவேற்கிறேன்" என்றான். அதைக் கேட்ட துறவி, சுற்றுமுற்றும்*

பார்த்தார். "அரசரே! யாரை வரவேற்கிறீர்கள்? இங்கு நாகசேனர் என்று ஒருவரும் இல்லையே! எனினும் நாகசேனருக்கு அளிக்கப்பட்ட வரவேற்பை நான் ஏற்றுக் கொள்கிறேன்" என்றார்.

இந்தப் பதில் கேட்டு மிகவும் குழப்பமடைந்த அரசன், "நீங்கள் நாகசேனர் இல்லை எனில், என் அழைப்பை ஏற்று இங்கு வந்திருப்பவர் யார்? என் கேள்விக்குப் பதில் தந்தது யார்?" என்றான்.

நாகசேனர் இதற்கு நேரிடையாகப் பதில் கூறாமல் அங்கிருந்த தேரைச் சுட்டிக்காட்டி, "இதுதானே நான் வந்த தேர்" என்று கேட்டு உறுதிப்படுத்திக் கொண்ட பின்னர், "இந்தக் குதிரைகளை அவிழ்த்து விடுங்கள்" என்றார். இரதத்திலிருந்து சேணம் நீக்கப்பட்டு தனித்து நின்றிருந்த குதிரைகளைக் காட்டி, "இதுதான் நான் வந்த தேரா?" என்றார். அரசன், "இவை குதிரைகள். இவற்றை எப்படித் தேர் எனக் கூற முடியும்?" என்றான். குதிரைகள் அவ்விடம் விட்டு நீங்கிய பின்னர், சேணங்கள் இணைக்கப்பட்ட நுகத் தடியைக் காட்டி "இதுதான் தேரா?" என்றார். "இது தேரல்ல" என்றான் அரசன்.

இங்ஙனம் ஒன்றன்பின் ஒன்றாக தேர்த்தட்டு, சக்கரங்கள், தேரின் மேற் சிவிகை, அச்சு அனைத்தும் ஒவ்வொன்றாகக் கழட்டப்பட்டன. ஒவ்வொரு பகுதியையும், "இதுதான் தேரா?" என்று துறவி வினவ, "அது தேர் இல்லை" என்று அரசன் மறுத்துக் கொண்டே வந்தான். முடிவில் அனைத்துப் பாகங்களும் கழற்றப்பட்டன. தேர் இருநத இடமே வெறுமை ஆனது. துறவி சிரித்துக் கொண்டே, "தேரின் ஒவ்வொரு பகுதியையும் தேர் இல்லை" என்று கூறிவிட்டீர்கள். அப்படியானால் "தேர் எங்கே உள்ளது" என்று வினவினார்.

மிலிந்தன் திகைத்துப் போய் நின்றான். நாகசேனர், "தேர் என்று ஒன்று தனியாகக் கிடையாது. பல



பொருட்கள் ஒன்றாகத் திரட்டப்பட்டு 'தேர்' என்று அழைக்கப்பட்டது. அப்படியே 'நாகசேனன்' என்று ஒன்றும் கிடையாது. அது ஒரு திரட்டப்பட்ட ஒன்றே. 'ஸ்கந்தம்' என்று அழைக்கப்படும் இதற்கு தனி ஓர் இருப்பு கிடையாது. மிலிந்தன் என்று கூறப்படும் உங்களுக்குள் உற்று நோக்குக. அந்த 'நான்' எங்கே உள்ளது? உங்கள் 'நான்' என்பதை ஒவ்வொன்றாகக் கழற்றிப் பாருங்கள். முடிவில் 'நான்' என்பதே காணாமல் போய்விடும்" என்று அரசனது ஆத்ம விசாரத்தைத் துவக்கி வைத்தார் துறவி. ஐந்து பூதங்களின் திரட்சியான உடல், எண்ணங்களின் குவியலான மனம், பஞ்ச கோசங்களின் திரட்சியான இந்த அகந்தையாம் 'நான்' என்று ஒவ்வொன்றாக ஆராய்ந்து நீக்கினால், 'நான்' என்பதே காணாமல் போய்விடுகிறது.

சங்கர பகவத் பாதர் தமது நிர்வாண ஷட்கத்தில் இதையே விளக்குகிறார்.

"மனோ புத்யஹங்கார சித்தானி நாஹம்
நசஸ்ரோத்ர ஜிஹ்வேந சக்ராண நேத்ரே

*நசவ்யோம பூமிர் நதேஜோ நவாயு:*
*சிதானந்த ரூப: சிவோஹம் சிவோஹம்"*

*நான் மனமல்ல; புத்தி அல்ல; அஹங்காரமல்லன்; சித்தமல்ல; இந்திரியங்களான செவி, நாக்கு, கண் போன்றவையும் அல்லன். ஆகாயமோ, பூமியோ, அக்னியோ, வாயுவோ எதுவும் அல்லன். சிதானந்த ரூபமான சிவமே நான் என்று அறுதியிட்டுக் கூறுகிறார் பகவத் பாதர்.*

*இதனையே பகவானும் ஆன்ம வித்தைக் கீர்த்தனையின் முதல் இரண்டு பாடல்களிலேயே விளக்கி விடுகிறார்.*

*"மெய்யாய் நிரந்தரம்தான் நையாது இருந்திடவும்*
*பொய்யும் உடம்புஉலகம் மெய்யாய் முளைத்தெழும் பொய்*
*மையார் நினைவுஅணுவும் உய்யாது ஒடுக்கிடவே*
*மெய்யார் இதயவெளி வெய்யோன் சுயம் ஆன்மா*
*விளங்குமே இருளடங்குமே இடரொடுங்குமே இன்பம் பொங்குமே"*

*இதன் பொருளாவது, "நான் மனம், புத்தி, அஹங்காரம், சித்தம், கோசங்கள் முதலிய பொய்த் தோற்றங்கள் அல்ல. தான், தனது, உண்மை இயல்பான ஆத்ம ஸ்வரூபத்தில் உறுதியுடன் நிலை கொண்டால் இக்கற்பனைகள் எதுவும் சாதகனைப் பாதிக்காது. உண்மைபோல, முளைத்தெழும் பொய்யுருவான அகங்காரத்தினை அணுவளவும் விடாது அழித்திடுக. அப்போது இதயாகாசத்தில் ஞானசூரியனாகிய ஆன்மா தானே தானாகப் பரிபூர்ணமாய் பிரகாசிக்கும். அப்பேரொளியில் அஞ்ஞானமாகிய இருள் ஒழிந்து, அதன் வெளிப்பாடாகிய துன்பங்கள் அனைத்தும் ஒழியும். ஆத்மானந்தம் பொங்கித் ததும்பும்."*

*ஆன்ம வித்தைக் கீர்த்தனத்தில் அடுத்த பாடலிலும் இந்த அகந்தைத் திரட்டையும், அதனை விசாரத்தினால் அழிக்கும் வழியையும் பகவான் கூறுகிறார்.*

*ஊனா ருடலிதுவே நானா மெனுநினைவே*
*நானா நினைவுகள்சே ரோர்நா ரெனுமதனா*
*னானா ரிடமெதென்றுட் போனா னினைவுகள்போய்*
*நானா னெனக்குகையுட் டானாய்த் திகழுமான்ம —*
*ஞானமே; இதுவே மோனமே; ஏக வானமே;*
*இன்பத் தானமே. - (ஆன்மவித்தை, 2)*

நாகசேனர் மிலிந்தனுக்குக் கூறிய கருத்தினையே பகவான் இப்பாடலில் அழகுற விவரிக்கிறார். "பலவிதமான மலர்களை ஒரு நாரில் சேர்த்துக் கட்டி மாலை உருவாக்குவதுபோல, பல்வேறு விதமாய் உதிக்கின்ற எண்ணங்கள் எல்லாமே 'தேகமே நான்' எனும் தேகாத்ம பாவனையாம் எண்ணத்தில் பிணைத்துக் கட்டப்பட்டுள்ளன. இந்த எண்ணங்கள் அனைத்திற்கும் அடிவாரம் 'நான்' எனும் அகந்தையே

*["எண்ணங்களே மனம் யாவினும் நான்எனும்*
*எண்ணமே மூலமாம் உந்திபற*
*யான மனம்எனல் உந்திபற"*

என்ற உபதேச உந்தியார் 18ஆவது பாடலிலும் இதே கருத்து விளக்கப்பட்டுள்ளது.]

நான் யார்? நான் என்ற எண்ணம் உதிக்கும் இடம் எது" என்று இதயத்துள் ஆழ்ந்து விசாரித்தால், எண்ணங்கள் அனைத்துமே அழிந்துபோய், 'நான், நான்' என்று ஆத்மா இதயக் குகைக்குள் முயற்சியே இன்றித் தானாகவே பிரகாசிக்கும். ஆத்ம ஞானமாகிய இதுவே மௌனம் எனும் உயர்மொழி. இதுவே எங்கும் பரந்த சுகானந்தப் பெருவெளியாம் சிதாகாசம்.

பிறவிப் பெருங்கடலைக் கடக்கும் ஓடம் போன்றது பகவானின் திருவடிகள். அதனை இறுகப் பற்றிக் கொண்டால் இனிப்பிறவி என்பதே கிடையாது. அகங்காரத்தை அழித்து, தன் முனைப்பு என்பதே சிறிதும் இல்லாமல், எல்லாம் 'பரமன் செயல்' என்று உணரும் அனுபவ நிலையில் வாழும் அடியார்க்கு சஞ்சிதம், ஆகாமியம் மட்டுமன்றி பிராரப்த வினையும்

இல்லை. பகவான் பதம் பற்றிய நொடியில் அவை பட்டென அறுந்து போகின்றன.

"ஜன்ம ம்ருத்யு ஜரா தப்த ஜன விஸ்ராந்தி தாயினி" என லலிதா சஹஸ்ர நாமம் (815) கூறுகிறது. பிறப்பு, இறப்பு, மூப்பு ஆகியவற்றைக் கடக்கவைத்து சாந்தியைக் கொடுப்பவள் தேவி. அதுபோன்றே, பிறவிக் கனலால் வரும் தாபத்தை நீக்குபவர் பகவான்.

பகவானின் அருட் சிறப்பினைக் கடக்க வைக்கும் சீரடிச் சிறப்பினை முருகனார் பாடுகிறார்:

"போதங் கடந்து உளப் புண்டரிகப்
பொலியும் மெய்ப் பூரணமே
ஆதங்கம் செற்று அடியார்க்கு அருளற்கு
அடைந்த அருள் வடிவைக் கருதி
வாதம் கடிந்து மனம் கடிந்து
மதம் சேர் அகந்தை மதிகடிந்து
பேதம் கடிந்து பிறங்குபரப்
பிரம்மம் பெட்பார் எம்பிரான் ஆவாரே."

- (ரமண சந்நிதிமுறை, 692)

இப்பாடலில் பகவானின் அவதார நோக்கத்தையும் சிறப்பையும் சிறப்புற விளக்குகிறார். அறிவையும் அறியாமையையும் கடந்து, இதயத் தாமரையில் ஒளிவீசுகின்ற பரிபூரணமாகிய பரம்பொருளே பகவான். நமது கவலையினை அழித்து, அடியவர்க்கு அருள்வதற்காக இந்தப் பரப்பிரம்ம ஸ்வரூபமான பகவான் அடியவர்தம் மனக் கோணலை நிமிர்த்தி, பின்னர் அந்த மனத்தையே அழித்து, பக்தன்-பரமன் என்ற பேதத்தையும் நீக்கி, அத்வைத உணர்வில் கரைக்கும் அருட் செயலைச் செய்கிறார் என்கிறார் முருகனார்.

"உடைத்தனை வஞ்சப் பிறவியை
சுந்தரி, நின்அருள் எது என்று சொல்லுவதே"

என்கிற ஆனந்த அநுபவத்தில் அபிராமி பட்டர் பாடும் இந்தப் பரமார்த்த நிலை உடனே வந்து விடுமா?

காரியம் முன் வந்தாலும் அதன் பின்னர் காரணம் ஒன்று உள்ளது அல்லவா? இதற்குக் காரணம் என் செயல் ஆவது யாதொன்றுமில்லை. அனைத்தும் உன் செயலே என்னும் பரிபூர்ண சரணாகதி உணர்வுதான் பகவானின் பேரருளுக்காக மனம் ஏங்கி உருக வேண்டும். கல்லாக இருக்கும் மனதில் அன்பும், பக்தியும் பூப்பதில்லை. நம்முடைய தாழ்நிலையை எண்ணி எண்ணி நம் நெஞ்சம் நெகிழ வேண்டும். பின் பகவானின் பேரருளுக்காக ஏங்கிக் கரைய வேண்டும். இதுவே ஆன்ம சாட்சாத்காரத்திற்கு முன் உள்ள வாயில். அகந்தை கடந்த சாத்ய நிலைக்குமுன் இருக்கும் சாதனை நிலையே உள்ளம் உருகும் இந்த அன்பு நிலை. இந்தப் பரபக்தி நிலையும் நம்முடைய முயற்சியால் வருவதில்லை. இறைவன் திருவருளே அந்நிலையை நம்மில் உண்டாக்க வேண்டும். இந்த உள்ளம் உருகும் நிலையை பகவான் அருணாசல பதிகத்தில் விளக்குகிறார்.

“அன்பு அருணாசல, அழல் மெழுகாய்
அகத்துஉனை நினைந்து நைந்து உருகும்
அன்புஇலி எனக்கு உன் அன்பினை அருளாது
ஆண்டுஎனை அழித்திடல் அழகோ?
அன்பினில் விளையும் இன்பமே, அன்பர்
அகத்தினில் ஊறும் ஆரமுதே!
என்புகல் இட நின்னிட்டம் என்னிட்டம்
இன்பு அது எற்கு, என்னுயிர் இறையே”

“அனைத்து உயிர்கட்கும் உயிராக இலங்கும் இறைவனாகிய அருணாசலா! பரம்பொருளாகிய உன்னைத் தியானிக்கும் எண்ணம் சிறிதும் இல்லாத என்னை நீயே வலிய வந்து உன் அருள் கயிற்றால் கட்டி இழுத்துக்கொண்டு வந்து பரமாத்மா வேறு, ஜீவன் வேறு என்ற பேதம் அழியும்படி, கொல்ல நிற்கிறாய்! அறிவற்ற என்னிடம் என்ன குறை உள்ளது? என் அகந்தையை நீ முற்றிலும் அழிக்கத்

*தடை இனி ஏதும் உள்ளதா? நான் ஆத்மிகத்தில் முற்றிலும் பரிணாமம் அடைந்து சாதனம் என்ற நிலையில் இருந்து சாத்யம் என்ற நிலைக்கு முழுமைபெற வேண்டும். அது முற்றுப் பெறாமல் பாதியில் விட்டு என்னைச் சித்ரவதை செய்யாதே. உன் அருளால் நான் பூர்ண ஞானம் அடைய வேண்டும் என்ற உன் நோக்கத்தை முழுமையாக நிறைவேற்றிக் கொண்டு உன்னைத் தவிர வேறு ஒன்றும் உலகில் இல்லை! என்ற ஏகான்ம நிலையில் ஒளிர்வாயாக!" என்று பாடுகிறார் பகவான்.*

*அக்ஷரமணமாலை அருள்நூலிலும் பல பாடல்களில் இந்நிலையைப் பகவான் குறிப்பிடுகிறார்.*

*"தைரியமோடுஉன் மெய்அக நாடயான்*
*தட்டழிந்தேன் அருள் அருணாசலா." (50)*

*"எனது ஆணவத்தினால் உந்தப்பெற்று அசட்டுத் தைரியத்துடன் உன்னுடைய உண்மை ஸ்வரூபத்தை என்னுள்ளே சென்று அறிய முயற்சித்தேன். வெற்று அறிவைக் கொண்டு இறைவனை அறிய முடியாது. என்னுடைய வெற்று அறிவும் இந்த முயற்சியால் தடம் புரண்டுபோய் நிலை குலைந்தேன். எனவே உனது திருவருள் கொண்டு என்னைச் சரியான பாதையில் செலுத்துவாய்" என்கிறார் பகவான்.*

*தாயுமானவர் பாடலிலும் இதே அருட்சிறப்பு காணப்படுகிறது.*

*"அருளாலே என்னையும்பார் என்றான். அத்தை*
*அறியாமலே எந்தன் அறிவாலே பார்த்தேன்*
*இருளானபொருள் கண்டதன்றி, கண்ட*
*என்னையும் காணேனே! என்னடி தோழி!"*

*"குருநாதன் அருளை நாடி அவன் தரும் அருள் கண்ணால் – அந்தமில்லா ஞானக் கண்ணால் – கண்டால் மட்டுமே இஞ்ஞானக் காட்சி புலப்படும். வெறும்*

அறிவைக் கொண்டு முயற்சித்தால் அந்தகாரம்தான் மிஞ்சும்; காண முயற்சிக்கின்ற என்னையும் கூடக் காண முடியாது" என்கிறார் தாயுமானவர்.

இங்ஙனம் குருநாதன் அருளை நாடி, சாதகன் முழு சரணாகதியுடன் செல்லும்போது அச் சத்குரு நமது தன் முனைப்பை, சிற்றறிவைப் பறித்துக்கொண்டு மெய்ச் சொரூபத்தை நமக்கு உணர்த்தி அருளுகிறான்.

"பொடியால் மயக்கி என் போதத்தைப் பறித்துஉன்
போதத்தைக் காட்டினை அருணாசலா" (73)

"உன்னுடைய திருவருள் என்னும் வசிய மருந்தால் என்னை மயக்கி, எனது ஜீவபோதம் என்னும் தன் முனைப்பைப் பறித்துக்கொண்டு, உண்மையான பரஞானத்தை எனக்குக் காட்டி அருளினாய்" என்று வியக்கிறார் பகவான்.

இங்ஙனம் ஜீவனை அருள் மயக்கத்தில் ஆழ்த்தி அகந்தை நீக்கத்தை இறைவன் செய்வதை திருவாசகம் விளக்குகிறது.

"கல்லா மனத்துக் கடைப்பட்ட நாயேனை
வல்லாளன் தென்னன் பெருந்துறையான் பிச்சேற்றிக்
கல்லைப் பிசைந்துக் கனியாக்கித் தன்கருணை
வெள்ளத்தழுத்தி வினைகடிந்த வேதியனை
தில்லை நகர்புக்குத் சிற்றம்பலம் மன்னும்
ஒல்லை விடையானைப் பாடுதும்காண் அம்மானாய்."

- (திருவாசகம், திருவம்மானை-5)

நம்மில் பலருக்கு சிறுநீரகம், கல்லீரல் போன்ற உள்ளுறுப்புக்களில் கல் உருவாகின்றது. அதை அறுவை சிகிச்சை செய்து மருத்துவர் குணமாக்குகிறார். அந்த அறுவை சிகிச்சை செய்ய முதலில் மருத்துவர் நோயாளிக்கு 'க்ளோராஃபாரம்' போன்ற மயக்க மருந்து கொடுத்துத் தன் உணர்வு இழக்கும்படி செய்கிறார். பின்னர் அறுவை சிகிச்சை மூலம் அந்தக் கல்லினை

அகற்றுகிறார். பிறகு மீண்டும் மீண்டும் கிருமிகளால் தொற்று நோய் ஏற்படாது இருக்க அறுவை சிகிச்சை செய்த இடத்தில் ஆன்டிபயாடிக் மருந்தினைப் போட்டு அலம்புகிறார். நோயாளிக்கு முற்றிலும் குணமாகிறது.

சாதகனாகிய நோயாளியின் உள் இருப்பது வெறும் சிறுநீரக மற்றும் கல்லீரல் கல் அல்ல. அது இறுகிய மனம் என்னும் கல். அதனை அறுவை சிகிச்சை செய்து நீக்க வேண்டும். வல்லாளன் – திறமை வாய்ந்த மருத்துவன் – திருப்பெருந்துறை சிவபிரான். எனக்கு முதலில் தன்மீது கொண்ட பரபக்தி என்னும் மயக்க மருந்து அளித்து என்னைத் தன்முனைப்பு இழக்கச் செய்கிறான். தன் உணர்வு இழந்த என்னில் அறுவை சிகிச்சை நடைபெறுகிறது. மனமான கல் சிறுநீரகக் கல் போன்று அது தூக்கி எறியப்படுகிறது. இல்லை. என் மனம் என்னும் கல்லினைத் தன் அருட் கரங்கள் கொண்டு பிசைந்து அருட்சாறு கொண்ட கனியாக மாற்றுகிறான். அந்த மாசு நீங்கிய கனிந்த மனம் மீண்டும் உலக மாசுக்களால் பாதிக்கப்படாதவாறு, அதனைத் தன் பெருங்கருணை வெள்ளம் என்னும் ஆன்டிபயாடிக் வெள்ளத்தில் அழுத்திப் பாதுகாக்கிறான். எனது கர்மவினை முற்றும் அழிந்து, நான் இறை உணர்வால் மட்டுமே நிரம்பப் பெறுகிறேன். மாசு நீங்கிய கனிந்த மனத்தை மீட்டும் எனது இதயக் குகையில் வைக்கிறான் என்று சிவபிரான் செய்யும் அருட் சிகிச்சையை அடியார் வியக்கிறார்.

“அருள் வெள்ளத்து அழுத்தல்” என்பது ஓர் அழகிய சொற்றொடர். மாசுகள் அனைத்தும் நீங்க வேண்டுமெனில், வேகமான வெள்ளம் பாய வேண்டும். அப்போதுதான் நம் நெஞ்சில் அடுக்கு அடுக்காய் சேர்ந்துள்ள மன மாசுக்கறகள் கரையும். பகவானின் அருள் வெள்ளம் கரையை உடைத்துக் கொண்டு பாயும் ஆறுபோலப் பெருக்கெடுப்பது. இதுவே பகவானின் அருள் வெள்ளம்.

*“நெஞ்சத்து அழுக்கை எல்லாம் நின்*
*அருட்புனலால் துடைத்தனை; சுந்தரி*
*நின் அருள்ஏதென்று சொல்லுவதே” - (அபிராமி அந்தாதி)*

அக்ஷரமணமாலை 89 ஆவது பாடலிலும், இறைவன் அடியார் மனத்தை மயக்கத்தில் ஆழ்த்திப் பண்படுத்துவது கூறப்படுகிறது.

*“யாருமறியாது என்மதியினை மருட்டி*
*எவர்கொளை கொண்டது அருணாசலா”*

வெள்ளம் என்று குறிப்பிட்டு அருள் வெள்ளம் மாசுக்களை அடித்துச் சென்றது என்று கண்டோம். இப்பாடலிலோ, “எனது சிற்றறிவை மருளச் செய்து மயக்கி மனத்தைக் கொள்ளை அடித்துச் சென்றது உன்னைத் தவிர வேறு யாராக இருக்க முடியும்?” என்கிறார் பகவான். ‘அறிவின் மருள் அறுத்து’ என்று அஷ்டகத்திலும் கூறப்படுகிறது இதே கருத்து.

“அருள் வெள்ளம் எப்போதும் பாய்ந்து கொண்டே இருக்கிறது” என்பது பகவான் அருள்வாக்கு. பின் ஏன் பெரும்பாலோருக்கு அருள் உணர்வு முகிழ்ப்பது இல்லை? இதை ஒரு நிகழ்ச்சி விளக்கும். எப்போதோ ஒரு சமயம் மழை பெய்யும் ஊர் அது. அன்றைக்கு மழை பெய்ய ஆரம்பித்தது. சமையல் செய்துகொண்டு இருந்த அன்னை, மகனை அழைத்து, அந்தப் பெரிய பாத்திரத்தினை முற்றத்தில் கொண்டு போய் வை. மழை நீர் நிரம்பட்டும் என்றாள். பையனும் அந்தப் புதிய பாத்திரத்தைக் கொண்டுபோய் முற்றத்தில் வைத்தான். பெருமழை இரண்டு மணி நேரம் கொட்டியது. மழை நின்றவுடன் தாயார் ஆவலுடன் மகனை நீர் நிரம்பிய பாத்திரத்தைக் கொண்டு வரச் சொன்னாள். பையனும் கொண்டு வந்தான். பாத்திரத்தில் ஒரு சொட்டு நீர்கூட இல்லை! ஏன் பாத்திரத்தில் நீரே இல்லை? மழையும் குறைவின்றி பெய்துள்ளது. பாத்திரமும் ஓட்டை எதுவும் இல்லாத கலயம். பின் ஏன் தண்ணீர் சிறிதும்

இல்லை? காரணம் இதுதான். தாயார், "பாத்திரத்தைக் கொண்டுபோய் மழையில் வை" என்று கூறியவுடன் கவிழ்த்து வைத்திருந்த பாத்திரத்தை மகன் அப்படியே எடுத்துச் சென்று முற்றத்தில் கவிழ்த்தே வைத்து விட்டான்! நிமிர்த்தி வைத்தால்தானே நீர் நிரம்பும்?

நாமும் மனத்தை அப்படித்தான் வைத்திருக்கிறோம். பகவானின் அருள் மழை இடையறாது பொழிந்து கொண்டு உள்ளது. மற்றவற்றைத் துறந்து மனம் திறந்து வேண்டும் முமுக்ஷுக்களுக்கு பகவானின் அருள் மழை பூரணமாகக் கிடைக்கும். நாமோ, அந்தப் பையனைப்போல நம் மனத்தை பூமியை நோக்கி அதன் கவர்ச்சிகளை நோக்கிக் கவிழ்த்து வைத்திருக்கிறோம். அது மலர்ந்து மேல் நோக்கி இருக்கவில்லை. கீழே உலகப் பொருளை நோக்கிக் கவிழ்ந்தே இருக்கிறது. பகவானின் அருள் வெள்ளம் பெருகி வந்தாலும், நாம் அதைப் பெறாமல் புறங்காட்டி நிற்கிறோம். கண் இருந்தும் குருடாக இருப்பார்போல், மனம் இருந்தும் கீழான உலகம் பற்றிய எண்ணங்களையே நிரப்பிக் கொண்டு இருக்கிறோம். மனத்தை மலர்த்தி பகவானை நோக்கித் திருப்ப வேண்டும். 'ஞிமிறுபோல நீயும் அலர்ந்திலை என்றே நேர்நின்றனை என் அருணாசலா' என்பதே பகவான் வாக்கு (மணமாலை 41) கீழ்நோக்கி மொட்டாகக் கிடக்கும் மனத்தை மேல்நோக்கி மலரச் செய்தால் பகவானின் அருள் மழையைப் பெறலாம்.

"இங்ஙனம் உயர்நிலையைப் பெற்ற பின்னரும் அதனின்றும் நழுவுதல் ஏற்படுமா?" என்ற சாட்விக்கின் கேள்விக்குப் பகவான் விடையிறுத்தார். "அனுபவத்தை இடையறாது நினைவு கூர்ந்து, திடப்படுத்திக் கொள்ள வேண்டும். அனுபவம் திடமாகாத நிலையில் வாசனைகளால் ஈர்க்கப்பட்டு அறியாமையால் மீண்டும் விழக் கூடும்."

*பகவான் மேலும் விளக்கினார். “தன்னை உணரா அஞ்ஞானமும், சந்தேகமும் ‘நான் உடல், உலகம் உண்மை’ என்று தவறாக நினைக்கும் எண்ணமுமே பெருந் தடைகள். அவை மூன்றும் இடையறாத சிரவண, மனன, நிதித்யாஸனத்தால் (கேட்டல், சிந்தித்தல், தெளிவாதல்) முற்றிலும் நீங்கும்.”*

*நிரந்தரமில்லாத தற்கால அனுபவத்தால் பந்தம் நீங்காது. அப்போதைக்கு பந்தம் அற்றாற்போல் தோன்றினாலும் முற்றிலும் நாசம் அடையாது. உள்ளே மறைந்துள்ள பந்தவாசனைகள் சாதுக்களை வெளியே தள்ளிவிடும். இதற்கு இடம் கொடுக்காது இடைவிடாது தன் ஆத்மாவிலேயே நிலைபெற்று நிற்பதால் காலக் கிரமத்தில் வாசனைகள் அனைத்தும் ஒழிந்து போகும். இவ்வாறு தடைகள் முற்றும் அற்ற நிலையில் திடஞானம் எம்முயற்சியும் நாட்டமும் இன்றி இயல்பாகவே இடைவிடாது ஒளிரும். அஞ்ஞானம் மீண்டும் உதிக்காது. இதுவே இறுதியான ஆனந்தநிலை (திருவருள் மொழி 95).*

*பரமஹம்ஸ யோகானந்த ஸ்வாமிகளின் செயலாளரான சி.ஆர்.ரைட் எழுப்பிய கேள்வியான “பரமானந்த நிலையை எப்படி அடைவது?” என்ற கேள்விக்கு பகவானின் விடை இதோ, “ஆனந்தம் இப்பொழுதில்லாது இனி அடையப் போவதில்லை. நம் சொரூபமே ஆனந்தம். இதை உணராததால் மனதில் ஒரு குறை உணர்ச்சி எழுகிறது. இதுவே ‘எப்படி ஆனந்தத்தை அடைவது?’ என்ற கேள்வியை எழுப்புகிறது. இங்ஙனம் யாருக்குக் குறை எழுகிறது என்பதைக் கவனிக்க வேண்டும். தூக்கத்தில் ஆனந்தமாய் இருக்கிறோம். விடியலில் அவ்வாறு இல்லை. ஏன்? இடையிலே ‘நான்’ என்ற போலித் தோற்றத்தின் எழுச்சியே அந்த ஆனந்த ஸ்வரூபத்தை மறைக்கிறது. அத்தடை நீங்க அந்த அகந்தையின்*

மூலம் எது என நாட வேண்டும். அந்நாட்டத்தினால் அகந்தை தன் மூலத்தில் மறைய, தனது ஸ்வரூபமான எல்லையற்ற ஆனந்தம் தடையற்று ஒளிர்கின்றது. சந்தேகப் பூட்டுகள் அனைத்தையும் திறக்கும் அற்புதச் சாவி. இந்த உள்முக நாட்டமே ஆனந்தத்தின் திறவு கோல்." (திருவருள் மொழி 106).

இந்த உள்முக நாட்டத்திற்குப் பெரும் உதவி செய்வது சத்சங்கம். சத்சங்கத்தின் சிறப்பினை பகவான் எடுத்துரைப்பதை நமது முந்தைய கருத்துப் பரிமாற்றங்களில் கண்டுள்ளோம். இந்த சத்சங்கத்தில் சேரும் வாய்ப்புகூட பகவான் திருவருளால்தான் கிடைக்கும். "அன்பர்களோடுகூட அவர்கட்குப் பணி செய்யும்பேறு எனக்குக் கிடைத்துவிட்டால் போதும். நான் வீடுபேற்றைத் தேடிக்கொண்டு செல்ல வேண்டிய தேவை இல்லை. அதுவே என்னைத் தேடிக் கொண்டு வந்து விடும்." என்று பாடுகிறார் தாயுமானவர்.

*அன்பர் பணி செய்ய என்னை ஆளாக்கி விட்டு விட்டால்*
*இன்பநிலை தானே வந்து எய்தும் பராபரமே*
*- (பராபரக்கண்ணி)*

*அன்போடுஉன் நாமம்கேள் அன்பர்தம் அன்பர்க்கு*
*அன்பனாயிட வருள் அருணாசலா*
*- (அக்ஷரமணமாலை 104)*

என்று பகவான் அறிவிப்பதை அழகான சொற்சித்திரமாக வடிக்கிறார் மணிவாசகர்

*உடையாள் உன்றன் நடுஇருக்கும்*
*உடையாள் நடுவுள்நீ இருத்தி;*
*அடியேன் நடுவுள் இருவீரும்*
*இருப்பதானால், அடியேன் உன்*
*அடியார் நடுவுள் இருக்கும் அருளைப்*
*புரியாய், பொன்னம்பலத்து எம்*
*முடியா முதலே, என் கருத்து*
*முடியும் வண்ணம் முன்னின்றே*
*- (திருவாசகம், கோயில் மூத்த திருப்பதிகம், 1)*

“இறைவா! உன்னிடத்தில் அம்பிகை இருக்கிறாள். அவளுள் நீ இருக்கிறாய். நீங்கள் இருவரும் என் உள்ளத்தே எழுந்தருள வேண்டும் என்பதே என் குறிக்கோள். ஆனால் நான் மட்டும் தனியாக இருந்தால் உங்களை நிலையாக என்னுள் பாதுகாத்து வைத்தல் இயலாது. பல தடைகள் ஏற்படலாம். அடியார் நடுவுள் இருந்தால் நீங்கள் தடையின்றி என்னுள் நிலைத்து நிற்பீர்கள். ஆகவே அடியேன் உன் அடியார் நடுவில் எப்போதும் இருக்கும் பேரருளை வழங்க வேண்டும்” என்பதே அவர்தம் பிரார்த்தனை. தம் அருளைப் பூரணமாக வழங்குவதற்குமுன் இறைவன் பக்தர்கள் அடியார் நடுவில் இருக்கும் நிலையை உருவாக்குகிறான். தண்ணீரைத் தேக்குவதற்குமுன் வரப்புகளை அமைப்பதுபோல், அருள் நிலைத்து நிற்க சத்சங்கத்தில்கூடி நிற்கப் பண்ணுகிறான்.

சகலவிதமான பூட்டுகள் அனைத்தையும் திறக்கும் சாவி பகவான் காட்டும் வழி ஒன்றே. இந்தச் சீர்வழியை, நேர் வழியை உலகிற்கு உணர்த்திடவே ரமணாவதாரம் நிகழ்ந்தது. அவரது ஞானமுரசம் எட்டுத் திக்கிலும் சென்று எதிரொலிக்கிறது. ‘பத்தன் நான் எனுமட்டும் பந்த முக்தி சிந்தனைகள். பத்தன் யார் என்பதனைப் பார்’ என்பது அவரது முரசொலி. நான் பந்த பாசத்தால், வாசனைகளால் கட்டுப்பட்டவன் என்று நீ எண்ணி மயங்கும் வரைதான், பந்தம் முக்தி பற்றிய கவலை வரும். “இப்படிக் கட்டுப்படுபவன் யார் என்று ஆராயும்போதே அந்தக் கட்டுக்கள் நீக்கப்பட்டு நீ சுத்த சைதன்யத்தில் நிலைபெறுகிறாய்” என்பதே பகவான் உபதேசம். ஸ்ரீமுருகனார் கூறுகிறார்.

*அண்ணாமலைநின் அறிவு முரசு ஒலியை*
*விண்ணேஅதிர, விழியார் விழித்துண்ணமக்*
*கண்ணே திறக்கக் கருணையால்தான் அறைந்திடும்*
*மண்ணே ரமண மகா வடிவில் வந்து அருளி*
*தண்ணார் விழியால் தடுத்து ஆளும் சத்குருவைப்*

*பெண்ணே அறிந்து நீ பேரின்பமுற்று உயர்வான்*
*பண்ணால் எழுப்பினோம். பாராய், பகவன் அருள்*
*உண்ணாய், இனியும் உறங்கேலோ ரெம்பாவாய்*

*- ஸ்ரீ ரமண திருவெம்பாவை*

*"நான், உடல், மனத் தொகுதியல்ல; சச்சிதானந்த சிவமே நான்" என்னும் பேருண்மையை உலகறியத் தன் ஞான முரசாம் வாக்கில் முழக்கி அடியார் ஞானக் கண் திறக்கும்படி தனது கமல நயன தீட்சை அளிக்கவே ரமண மஹா குருவே மண்ணில் வந்தது. தனது அருள் பொங்கும் வழியால் அடியாரை வழி தவறிச் செல்லாமல் தடுத்து ஆட்கொண்டது. அந்த சத்குருவின் அருளை நாம் அறிந்து பேரின்பமுற்று, மாயா மயக்கத்தினின்றும் விடுபட்டு ஆன்ம ஒளியில் விழித்தெழுவோமாக!*

*மீண்டும் சந்திப்போம்.*

*பகவான் பணியில் தங்கள்,*

*ராம்மோஹன்*

*ரமண இணையதளங்கள்*

Sri Ramanasramam, Tiruvannamalai
www.sriramanamaharshi.org

Arunachala Ashrama, New York
http://www.arunachala.org

Ramanalayam, Chromepet and for Ramanodhayam issues
www.ramanalayam.org

# புத்தர்

## நொச்சூர் வெங்கடராமன்
## தமிழாக்கம்: கௌதமன்

இப்புவியில் வந்து கால்பதித்த அந்தப்புராதன மஹாகுரு
கருணைச் சக்கரத்தின் பயணத்தை துவக்கி வைத்தவர்
ஆத்மாவின் ஆழ்ந்த மௌனத்தில் கரைந்தவர்
பின்னர் அனைவர் நலம் பொருட்டும் மீட்டும் வந்தவர்
ஒப்புயர்வற்ற அம்மகாமுனி
எல்லார் விடுதலைக்காகவும் மனித யத்னம்
தனைக் கடந்த தவம் புரிந்தோன்
தனது என்பது அனைத்தையுமே துறந்த
காருண்யம் எனும் பிட்சைப் பாத்ரம் ஏந்தி
துறவிகள் வேந்தராய் ஒளிர்ந்தவன்
அன்பு மற்றும் அறிவின் எல்லையற்ற கடல் அறிந்தோன்
அந்தப் பெருந்துறவி என்னிடம் தொடர்ந்து வந்து
என்னுடைய இருப்பில் ஒன்றாய்க் கலந்தான்
என்னுடைய இதயக் குகையின் பேராழத்தில்
அவனுடன் நான் ஒன்றானேன்.
எம் தலைவ! எல்லையற்ற ஆழமே உனது நாமம்
நமது ஜீவியமே ப்ரக்ஞானத்தின் களம்
நமது வாழ்க்கையே போதிமரம்
அவ்வாழ்வினை முழு கவனத்துடனும், வாழுங்கள்
ஒவ்வொரு வாழ்விலும் - உன்னுடைய வாழ்விலும்
பூர்ணமே பொதிந்துள்ளது
உலகின் முழுப் படைப்புமே
உன்னில் புதைந்துள்ளது
இந்த சம்ஸாரத்தின் ஆணிவேரைக் கண்டுபிடி
அந்தப் பரமான்மாவே தூய ஒன்றே

இச் சம்சாரத்தின் ஆணிவேர்
அந்த உயர்தூய்மையை இச் சம்சாரத்தின்
கண்டறியாத மூலைகளில் தேடிக் காண்க.
தேடுங்கள், ஆழ்ந்த கவனத்துடன் தேடுங்கள்
அதனைக் கல்வியினாலோ, சம்பிரதாயங்களாலோ
உன்னால் கண்டறிய இயலாது
ஆழ்ந்த கவனத்துடன் கூடிய தேடலே
அதனைக் கண்டறியும் கருவி
உன் உள்ளத்தின் அடிவேர்வரை
அந்தக் கவனம் பரவி இருக்கட்டும்
ஒவ்வொரு களத்திலும் கவனத்துடன் இருப்பாய்
இதுவரை கண்டறியாத ஆழத்தில் தேடுக
உன்னுடைய அந்தராத்மாவில்
ஆழ்ந்து சென்று காண்பாய்
அதன் ஆணிவேர்தான் சச்சிதாநந்தம்
அதனின்றும் 'நான்' என்னும் முதல் சல்லிவேர்
முளைத்தெழுகிறது; பின்னர் 'எனது' எனும்
கிளை முளைத்தெழுகிறது

# இனிவரும் திருநாட்கள் - 2015

| | | | |
|---|---|---|---|
| *செப்டம்பர்* | 1 | *செவ்வாய்* | *அருணை விஜய தினம்* |
| *அக்டோபர்* | 13 | *செவ்வாய்* | *நவராத்திரி விழா ஆரம்பம்* |
| | 21 | *புதன்* | *சரஸ்வதி பூஜை* |
| | 22 | *வியாழன்* | *விஜயதசமி* |
| *நவம்பர்* | 11 | *புதன்* | *தீபாவளி* |
| | 16 | *திங்கள்* | *கார்த்திகை உற்சவம் ஆரம்பம்* |
| | 25 | *புதன்* | *கார்த்திகை தீபம்* |
| *டிசம்பர்* | 27 | *ஞாயிறு* | *பகவான் 136 வது ஜயந்தி* |

மேற்கண்ட விழா நிகழ்வுகளின் மாற்றங்களை அறிய ஆச்ரம இணையதளம் www.sriramanamaharshi.org பார்க்கவும்

# பரோக்ஷத்திலிருந்து அபரோக்ஷத்திற்கு

**பிர. கிரிதர ஜெகதீஷ்**

பரோக்ஷ ஞானம், அபரோக்ஷ ஞானம் என்ற இரண்டு ஸப்த பிரயோகங்கள் தத்துவ உலகத்தில் அதிகமாக பயன்படுத்தப்படுகின்றன. இவ்விரண்டு கருத்துக்களையும் நன்கு தெளிவு படுத்திக் கொண்டால் ஆத்ம சாதனத்தை வெற்றிகரமாக நிறைவேற்றி, ஆத்மானுபூதியைச் சந்தேஹமின்றி அடைந்தவர்களாகி விடுவோம்.

பரோக்ஷ ஞானம் என்றால் கேள்வி ஞானம் (The Theoretical Knowledge). அபரோக்ஷ ஞானம் என்றால் அனுபவ ஞானம் (The Experiential Knowledge). இதுதான் இவ்விரண்டு வார்த்தைகளுக்குரிய நேரிடையான அதேசமயம் மேலோட்டமான அர்த்தங்களாக இருக்கின்றன. ஆகவே இவ்விதம் பொருள் படுத்துவதோடு நின்று விட்டால் ஞானத்தைக் குறித்த நிலைப்பாடு அவ்வளவு உறுதியாக இருக்காது. நிச்சயமற்ற வானிலை அறிக்கையைப்போல ஞான விஷயத்தில் தெளிவற்ற மனநிலையே தொடர்ந்து கொண்டிருக்கும்.

ஆகவே பகவான் ரமண மகரிஷி இவ்விஷயத்தில் தம்முடைய பயணத்தை மிகவும் ஆழமாக

மேற்கொண்டிருக்கிறார். கவனிக்க வேண்டும். தம்முடைய பயணத்தை மிகவும் தூரமாக மேற்கொண்டிருக்கிறார் என்பதற்கு பதிலாக மிகவும் ஆழமாக மேற்கொண்டிருக்கிறார் என்று சொல்வதற்குரிய காரணம் இந்தப் பயணத்தின் பயணி, பயணம், செல்லக்கூடிய இடம் இம்மூன்றும் ஒரே இடத்தைப் பற்றியதாக இருப்பதால் அதாவது பயணம் செய்பவனிடத்திலேயே இருப்பதால் தூரம் என்பதற்குப் பதிலாக 'ஆழம்' என்று கூறப்படுகிறது. அந்தர்முகமாக அதாவது தன்னுள்ளே, தன்னைக் கொண்டு, தன்னையே அடையும் ஒரு பயணம்.

பிரதிபந்த ஸஹித ஞானத்தை பரோக்ஷணம் என்றும், பிரதி பந்தரஹித ஞானத்தை அபரோக்ஷ ஞானம் என்றும் சாஸ்திரம் கூறுகிறது. பிரதிபந்த ஸஹித ஞானம் என்றால் தடைகளுடன் கூடிய ஞானம் என்று பொருள். அதேபோல பிரதிபந்த ரஹித ஞானம் என்றால் தடைகள் நீங்கிய ஞானம் என்று பொருள். ஞானத்திற்குரிய பிரதிபந்தங்கள் அதாவது தடைகள் எவையென்றால் அஞ்ஞானம், சந்தோஷம், விபரீதம் என்று உபதேசம் செய்யப்படுகிறது. அதிலும் சந்தேஹ, விபரீதங்களே ஞானத்திற்குரிய முக்கியத் தடைகளாகக் கருதப்படுகிறது.

ஆகவே சந்தேஹ, விபரீதங்களுடன் கூடிய ஞானத்தை பரோக்ஷ ஞானம் என்றும், சந்தேஹங்கள் அற்ற ஞானத்தை அபரோக்ஷ ஞானம் என்றும் பொருள் படுத்த வேண்டும்.

தன்னைக் குறித்து குரு தருகின்ற ஞானமும், தன்னைக் குறித்து தான் கொண்டிருக்கிற ஞானமும் முரண்படுகின்ற நிலையே சந்தேஹம் என்றும், அம்முரண்பாடு நீங்கி தெளிந்த ஞானம் ஏற்பட்ட பிறகும் பூர்வ ஜென்ம வாசனையால் மீண்டும் அநாத்மவாகிய இந்த சரீரத்தில் நான் என்று அபிமானிக்கும் புத்தியே விபரீதம் என்றும் சாஸ்திரம் கூறுகிறது.

நான் என்று அபிமானிக்கும் புத்தியே விபரீதம் என்றும் சாஸ்திரம் கூறுகிறது.

நான் காசிக்குப் போயிருக்கிறேன். ஆனால் வாரணாசிக்குப் போனதில்லை. ஆகவே வாரணாசியைக் குறித்து எனக்கு எதுவும் தெரியாது என்று ஒருவர் கூறினால் அவரிடம் காசியைக் குறித்த பரோக்ஷ ஞானம் மட்டும் இருக்கிறது என்று பொருள். ஏனென்றால் அவருடைய ஞானத்தில் சந்தேஹம், விபரீதம் என்கிற தோஷங்கள் கலந்திருக்கின்றன.

நான் காசிக்குப் போயிருக்கிறேன். ஆனால் வாரணாசிக்குப் போனதில்லை. ஆகவே வாரணாசியைக் குறித்து எனக்கு எதுவும் தெரியாது என்று ஒருவர் கூறினால் அவரிடம் காசியைக் குறித்த பரோக்ஷ ஞானம் மட்டும் இருக்கிறது என்று பொருள். ஏனென்றால் அவருடைய ஞானத்தில் சந்தேஹம், விபரீதம் என்கிற தோஷங்கள் கலந்திருக்கின்றன.

நான் காசிக்குப் போயிருக்கிறேன். வாரணாசியைப் பற்றி எனக்குத் தெரியும். காரணம் காசி என்றாலும், வாரணாசி என்றாலும் இரண்டும் ஒன்றே என்று ஒருவர் கூறினால் அவரிடம் காசியைப் பற்றிய அபரோக்ஷ ஞானம் இருக்கிறது என்று பொருள். ஏனென்றால் அவருடைய ஞானத்தில் சந்தேஹம், விபரீதம் என்கிற தோஷங்கள் இல்லை.

அதுபோல இன்ப துன்பங்களை மாறி மாறி அனுபவித்து வரும் ஒரு ஜீவனே நான். ஒரு காலத்தில் பிறந்தேன்; இப்பொழுது இருந்து கொண்டிருக்கிறேன். பின்னொரு காலத்தில் இறந்து விடுவேன் என்ற ரீதியில் என்னைப் பற்றி எனக்குத் தெரியும். ஆனால் சாஸ்திரங்கள் கூறுகின்ற இறைவன், பிரம்மம் அல்லது ஆத்மா என்ற பேரானந்தமே வடிவான என்னுடைய ஸ்வரூபத்தைப் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. இப்படிப்பட்ட ஞானத்திற்கு பரோக்ஷ ஞானம் என்று பெயர்.

அதேபோல இன்ப துன்பங்களை அனுபவித்துக் கொண்டிருக்கும் ஜீவனாக நான் தோன்றிக் கொண்டிருக்கிறேன். அதேசமயம் சாஸ்திரங்கள் கூறுகின்ற ஆத்மா, பிரம்மம் என்ற என்னுடைய மேலான ஸ்வரூபத்தையும் நான் அறிந்திருக்கிறேன். நான் பிறந்தேன்; வாழ்ந்து கொண்டிருக்கிறேன்; எதிர்காலத்தில் இறந்து விடுவேன் என்பன என்னுடைய உடல், மன உபாதியின் தர்மமேயன்றி என்னுடைய தர்மம் அல்ல. உண்மையில் நான் என்பது சச்சிதானந்த ஆத்மன் என்று ஒருவர் தன்னைப் பற்றி அறிந்திருந்தால் அந்த ஞானத்திற்கு அபரோக்ஷ ஞானம் என்று பெயர்.

பகவான் ரமணரின் மைக்ராஸ்கோப் ‘நான்’ என்ற தத்துவத்தை எவ்விதம் பிரித்துப் பார்த்து பொருள் படுத்துகிறது என்று பார்ப்போம்.

*“உடல்நானே தன்னை உணரார்க்கு உணர்ந்தார்க்கு*
*உடல்அளவே நான்தன் உணரார்க்கு - உடலுள்ளே*
*தன்னுணர்ந்தார்க்கு எல்லையறத் தான்ஒளிரும்*
*நான்இதுவே*
*இன்னவர்தம் பேதம்என எண்.”*

- **ஸ்ரீ பகவானின், உள்ளது நாற்பது**

“தன்னை உணராதவர்க்கும், தன்னை உணர்ந்தவர்க்கும் உடல் என்பது நானேயாகும். தன்னை உணராதவர்க்கு நான் என்கிற வஸ்து உடல் அளவாக மட்டுமே உள்ளது. தன்னை உணர்ந்தவர்க்கோ நான் என்கிற வஸ்து எல்லையற்ற உடல் உட்பட எல்லாம் தன்மயமாகவே பிரகாசிக்கிறது. இதுவே ஞானிக்கும், அஞ்ஞானிக்கும் இடைய உள்ள பேதம் என்று அறி.”

*“ஜாக்$^3$ரத் ஸ்வப்ன ஸுஷுப்த்யாதி$^3$ ப்ரபஞ்சம்*
*யத்ப்ரகாச$^1$யதே ।*
*தத்ப்ரஹ்மாஹமிதி ஞாத்வா ஸர்வப$^3$ந்தை$^3$:*
*ப்ரமுச்யதே ॥”*

“விழிப்பு-கனவு-உறக்கம் முதலிய உலகத்தை விளக்குவது எதுவோ அந்த ப்ரஹ்மன் நான் என்று



அறிந்து ஒருவன் எல்லா பந்தங்களிலிருந்தும் விடுவிக்கப்படுகிறான்" என்று கைவல்ய உபநிஷத் கூறுகிறது.

ஆக ஏற்கெனவே நம்முடைய கைவசமுள்ள 'நான்' என்ற அநுபவத்தைக் குறித்த ஒரு தெளிந்த பார்வையே அபரோக்ஷ ஞானம் என்று கருதப்படுகிறது.

ஞானவிசாரம் என்கிற பயணத்தை மேலும் தொடர்வோம்.

பிரம்மத்திடம் அநிர்வசனீயமான அதாவது இன்னதென்று விளக்க இயலாத மாயை என்ற ஒரு தத்துவம் தோன்றிக் கொண்டிருக்கிறது. அந்த மாயையிடம் இரண்டு சக்திகள் இருக்கின்றன என்று சாஸ்திரம் கூறுகிறது.

அவைகள்:

1) ஆவரண சக்தி (மறைக்கும் சக்தி)

2) விக்ஷேப சக்தி (தோற்றுவிக்கும் சக்தி)

இந்த மாயையால் எது மறைக்கப்படுகிறது? எது தோற்றுவிக்கப்படுகிறது என்பது அடுத்த கேள்வி.

இந்த மாயையானது பிரம்மத்திடம் இருந்துகொண்டு பிரம்மத்தையே மறைக்கிறது. பிறகு மறைக்கப்பட்ட பிரம்மத்திடம் ஜகத்தையும், ஜீவர்களையும் தோற்று விக்கிறது. மாயையானது பிரம்மத்தையே மறைக்கிறது என்றால் மாயை பிரம்மத்தைவிட பெரிதா என்பது அடுத்த கேள்வி. ஏனென்றால் பெரிதுதான் சிறியதை மறைக்க முடியும். பிரம்ம விஷயத்தில் இந்த வாதம் பொருந்தாது. ஏனென்றால் பிரம்ம என்றாலே பெரிதினும் பெரிது என்று பொருளாகிறது. ஆகவே பிரம்மத்தைக் காட்டிலும் பெரிது என்பது இங்கு எதுவும் இல்லை.

அப்படியென்றால் மாயையானது பிரம்மத்தை மறைக்கிறது என்பதற்கு என்ன பொருள்?

மேகமானது சூரியனை மறைக்கிறது என்று கூறப்படுகிறது. உண்மையில் மேகத்தால் சூரியனை மறைக்க முடியுமா? மேகமோ அல்பம் (சிறியது). சூரியனோ ப்ருஹத் (பெரிது). ஆகவே மேகத்தால் சூரியனை மறைக்க முடியாது. அப்படியென்றால் இங்கே மறைத்தல் எவ்விதம் நடைபெறுகிறது?

மேகமானது பார்ப்பவனின் பார்வையை மறைத்திருக்கிறது. அது ஒருபோதும் சூரியனை மறைப்பதில்லை. இன்னும் கூறப்போனால் மேகத்தினுடைய இருப்பே சூரியனால்தான் நமக்கு விளங்குகிறது. ஆகவே 'கவனம்' மறைக்கப் பட்டிருக்கிறது. பார்ப்பவனின் பார்வையை மேகமானது தம்மிடம் ஈர்த்திருக்கிறது. ஆகவே சூரியன் மறைக்கப்பட்டதுபோல தெரிகிறது.

ஆத்ம விஷயத்திலும் இதுதான் நிகழ்ந்திருக்கிறது. ஆத்மனையோ அல்லது பிரம்மத்தையோ மாயையால் மறைக்க முடியாது. பிறகு என்ன நடந்திருக்கிறதென்றால் ஜீவனின் திருஷ்டியை, பார்ப்பவனின் கவனத்தை மாயையானது தம்முடைய

வசத்தில் ஈர்த்து வைத்திருக்கிறது. ஜீவனின் கவன சக்தியானது மாயையால் களவாடப்பட்டிருக்கிறது. ஆகவே பிரம்மம் அல்லது ஆத்ம ஸ்வரூபம் இழக்கப்பட்டு ஜீவ, ஜகத் அனுபவங்கள் எழுந்துள்ளன.

குரு சாஸ்த்ர கமனம் (குருவையும், சாஸ்திரத்தையும் அணுகுதல்) என்ன செய்கிறதென்றால் நம்முடைய கவன சக்தியை மாயையிடமிருந்து மீட்டெடுக்கும் வேலையைச் செய்கிறது. ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் நடைபெறுகிறது.

உலக விஷயங்களில் பரோக்ஷ ஞானம் (ஏட்டுக் கல்வி) என்பது வேறாகவும், அபரோக்ஷ ஞானம் (அனுபவக் கல்வி) என்பது வேறாகவும் இருக்கிறது. மைசூர்பாகு செய்வது எப்படி என்ற அறிவு என்பது வெறும் வாசா ஞானம். அது சுவையைத் தராது. வாணலியில் நெய் மணக்க, மணக்க சர்க்கரையும், கடலை மாவையும் சேர்த்து சரியான பதத்திற்கு வார்த்தெடுக்க வேண்டும். பிறகு சுவைத்துப் பார்த்து அனுபவ ஞானத்தை அடைகிறோம். இதைத்தான் ஞானகர்ம சமுச்சயம் என்று சொல்வார்கள். பரோக்ஷ ஞானத்தை அபரோக்ஷ ஞானமாக மாற்ற கர்மத்தைப் பயன்படுத்திய ஆக வேண்டும். உலக ஞானங்கள் அனைத்திலும் இவ்விதி நன்கு பொருந்தி வருகிறது. ஆனால் ஆத்ம விஷயத்தில் அதாவது ‘நான்’ என்ற அனுபவ விஷயத்தில் அப்படி கர்மத்தைச் சேர்க்க முடியாது. கர்ம சமுச்சயம் இங்கு நடைபெற வாய்ப்பில்லை. காரணம் தன்னைக் குறித்த ஆத்ம விஷயத்தில் பரோக்ஷ ஞானமே அபரோக்ஷ ஞானமாக விளங்கிக் கொண்டிருக்கிறது.

ஆத்ம விஷயத்தில் மட்டுமே கேள்வி ஞானமும், அனுபவ ஞானமும் ஒன்றாக இருந்து கொண்டிருக்கிறது. அப்படியென்றால் பிறகு ஏன்

துயரம் ஏற்படுகிறது என்றால் தன்னை (ஆத்மனை), தானல்லாத உடல், மன உபாதிகளோடு கலந்து நான் என்று புரிந்து கொண்டிருப்பதால் ஸத், சித், ஆனந்தத்திற்கு எதிரான பொய், ஜட, துக்க அனுபவங்கள் தோன்றுகின்றன.

ஆகவேதான் பகவான் ரமணர் எந்த மனிதருக்கு, எப்படிப்பட்ட ஐயம் எழுந்தாலும் 'இது யாருக்கு?' என்ற பொதுவான ஒரு மருத்துவ முறையைக் கையாண்டார். இது யாருக்கு என்ற கேள்வியால் உபாதி கல்லோளங்கள் ஒழிந்து போகின்றன. ஆத்மா மட்டுமே எஞ்சியிருக்கிறது.

ரமண சந்நிதியில் ஸத் சம்பாஷணை நடந்து கொண்டிருந்தது. ஆத்ம ஞானத்கைக் குறித்த விவாதமும், விசாரமும் பல கோணங்களில் தீவிரமாக அலசப்பட்டன. 'சித் ஜட க்ரந்தி' - உடலுக்கும், உணர்வுக்கும் இடையே ஏற்பட்ட முடிச்சு எவ்விதம் ஏற்பட்டது என்ற ஆராய்ச்சி நடைபெற்றுக் கொண்டிருந்தது. பேச்சின் நடுவே அரவிந்த போஸ் என்ற பக்தர் 'உடலுணர்வு' என்று ஏதோ பேச ஆரம்பித்தார். அதைக் கேட்டதும் பகவான், "'உடலுணர்வு' என்றால் என்னவென்று முதலில் பார். உணர்வுக்கு அந்நியமாக நாம் இருக்கிறோமா? உணர்வால் அன்றோ உடல் இருந்து வருகிறது. நான் என்னும் உணர்வு எழுந்தபின்பே நான் உடல் என்ற உணர்வு உண்டாகிறது. நான் என்னும் அகந்தையுணர்வோ அஹம் ஸ்பூர்த்தியிலிருந்து உண்டாகிறது. எப்போதும் உள்ளது அஹம்-மெய்யுணர்வு ஒன்றே. அதுவே நாம்" என்றார்.

ஆக இருப்பது ஒரே ஞானம். கவனத்தை இடமாற்று வதன் மூலம் அதுவே பரோக்ஷ ஞானமாகவும், அபரோக்ஷ ஞானமாகவும் புலப்படுகிறது.

*கவனத்தை உடல், மன உபாதிகளின்மேல் திருப்பும் பொழுது சைதன்ய ஸ்வரூபமானது சாதாரண அஹங்காரமாக, பரோக்ஷ ஞானமாக அனுபவமாகிறது. உடல், உபாதிகளை வெறும் தோற்றம் என்று உணர்ந்து கவனத்தை உணர்வின்மேல் மட்டும் பதிக்கும்பொழுது அதுவே அபரோக்ஷ ஞானமமாக தெளிவு பெறுகிறது.*

*"நான் எனும் சொற்பொருளாம்அது நாளுமே*
*நான் அற்ற தூக்கத்தும் உந்தீபற*
*நமது இன்மை நீக்கத்தால் உந்தீபற"*

*- உபதேச உந்தியார், 38*

*"நான் என்ற அகந்தை உணர்வு ஒடுங்கிய தூக்கத்திலும்கூட நாம் இல்லாமல் போவோம் என்பது இல்லாததால், நான் என்னும் சொல்லுக்குரிய பொருள் அந்தப் பரிபூரண வஸ்துவே ஆகும்."*

*இங்கே ரமண சந்நிதியில் ஆடாமல், அசையாமல் ஒரு பயணம் நிகழ்கிறது. நான்-ஐக் குறித்த 'தற்கவனம்' என்பதுவே அப்பயணம். இங்கே 'பயணம்' என்றால் புரிந்து கொள்ளல் மட்டுமே.*

---


# ரமணோதயம்

Voluntary Services

K. *சுரேஷ் ஜானகிராமன்* *9444127770*

*ராஜேஷ்* M.S. *9840075778*

*வஸந்தா ராகவன்* *9445432335*

# மரணம் மதுரம்

## சு.பரமேஸ்வரன், கோவை

பிறப்பும் இறப்பும் ஒரு சக்கரம்போல் சுழன்று கொண்டே இருக்கிறது. திருவள்ளுவர் வாழ்வைப் பற்றியும், மரணத்தைப் பற்றியும் மிக அழகாகக் கூறுகிறார்: வசை ஒழிய வாழ்வாரே வாழ்வார். ஒருவர் இறந்த பின்பு, ஐயோ! நல்ல மனிதர் போய்விட்டாரே என்று பிறர் போற்ற வாழ்வதுதான் வாழ்க்கை. மாணிக்கவாசகரும், சொல்லிய பாட்டில் பொருள் உணர்ந்து சொல்லுவார், செல்வர் சிவன் அடிக்கீழ் பல்லோரும் ஏத்தப்பணிந்து என்பார். காந்திமகான் இறந்தபோது நாட்டு மக்கள் அனைவரும் கதறி அழுதார்கள்.

மரணம் என்றால் என்ன? உறங்குவதுபோல் சாக்காடு. உடலை விட்டு உயிர் பிரிந்த நிலையில் மரணம் என்கிறோம். திடப்பொருள் திரவமாகிறது, திரவப் பொருள் ஆவியாக மாறும். ஒன்று மறைந்து ஒன்று தோன்றுகிறது. எது உள்ளதோ; அது ஒருபோதும் அழிவதில்லை. நமக்கு சுய நினைவு எனும் உணர்வு மூன்று நிலைகளில் இல்லாது போகிறது. ஆழ்ந்த உறக்கம், மயக்க நிலை, மரணம். உறக்கத்திலிருந்தும், மயக்கத்திலிருந்தும் விடுபட வாய்ப்பு உண்டு. ஆனால் மரணத்திலிருந்து யாரும் விடுபட முடியாது. எனவே, மரண பயம் என்பது எல்லோரிடத்தும் எப்போதும் உண்டு. பிறந்தவனுக்கு மரணம் உண்டு என்பதை யாவரும் அறிவர். ஆனால் இறந்த பின்பு, மறுபிறப்பு உண்டு என்பதை சாஸ்திரங்கள் மூலமும்;

சான்றோர்களின் வாக்குகளிலிருந்தும்தான் நம்புகிறோம். உலகில் இந்துக்கள், சமணர், பௌத்தர்களுக்கு இந்த நம்பிக்கையுண்டு. மறுபிறப்பு என்பது, உறங்கி விழிப்பது போலும் பிறப்பு. சத்து போய் விட்டால் இருப்பது சக்கை தானே? உயிர்ச்சத்து போய்விட்டது என்பதைத்தான் செத்துப்போய்விட்டான் என்கிறோம். பணவெறி, அதிகார வெறி, புகழ்வெறி, காமவெறி உள்ளவர்களுக்கு மரணபயம் மிக அதிகமாக இருக்கும்.

*நாளை, நாளை என்பீராயில்*
*நமனுடைய முறைநாள் ஆவது மறியீர்*
*நம்முடைய முறைநாள் ஆவதும் அறியீர்*
*எப்போதாயினும் கூற்றுவன் வருவான்!*
*உயிர் கொடு போவான்! உடல் கொடுபோகான் . . .*

- கபிலர்

கூற்றுவன் - யமன் உயிரை மட்டுமே எடுத்துச் செல்வான், உடலை இங்கேயே விட்டு விடுவான். அவன் எப்போது வேண்டுமானாலும் வருவான் என நமக்கு எச்சரிக்கை விடுகிறார் கபிலர்.

தூல உடலே நாம் என அபிமானித்து அதற்காகவே உழைத்து, பாடுபட்ட மனிதன் எதற்காக அழுகிறான்? குறித்த நேரத்தில் வந்த கூற்றுவன் உடலைச் சீண்டவும் இல்லையே. உயிரைத்தானே கவர்ந்து சென்றான். பேதைகளே எதற்காக அழுகிறீர்கள்? உடலை விட்டு நீங்கிய உயிருக்காகவும், அழியப் போகும் உடலுக்காகவும் அழுவது வீண் வேலை? உயிர்போன பின் அழுவதும், மரணபயத்தோடு நித்தமும் வாழ்வதைவிட, வாழும் காலத்தில் எது உகந்ததோ அதனைச் செய்து விடுதல் அறிவுடைமை அல்லவா? உடல் இழப்பு இழப்பே அல்ல அது இப்போதும் சவமாகவே உள்ளது.

*நாம் யாருக்கும் குடியல்லோம்*
*நமனை அஞ்சோம்*

என யார் பாட முடியும்?

*கால உனை நான் சிறுபுல்லென மதிக்கிறேன் - என்றன்*
*காலருகே வாடா சற்றே உன்னை மிதிக்கிறேன்*

என்று உணர்ச்சி பொங்கிப் பாடினார் பாரதியார்.

ஆணவம், அகந்தை, அவம், மறலி, எமன், பாசம் என்பது ஒரு பொருள் குறித்து பல சொற்கள். தன்னை அறிந்தவன் மட்டுமே மரணத்தை அஞ்சாமல் வரவேற்கிறான்; மரணத்தையும் அறிகிறான். அகந்தைக்குத்தான் பிறப்பும், இறப்பும். அகந்தை துறந்தவனுக்கு பிறப்பு, இறப்பில்லை. தான் அறிவு என்று உணர்ந்த சான்றோர்களுக்கு பயமேது? அஞ்சவருவதும் எதுவும் இல்லை.

பரம ஞானியான ரமணர் அன்பர்களின் வேண்டுகோளுக்கு ஏற்ப அருளிய நூல் உள்ளது நாற்பது. அதிலுள்ள மங்கல வெண்பா இதோ:

*மரணபய மிக்குளவம் மக்களரணாக*
*மரணபவ மில்லா மகேசன் - சரணமே*
*சார்வார் தஞ் / சார்வொடுதாஞ் சாவுற்றார் சாவெண்ணஞ்*
*சார்வரோ சாவாதவர்.*

தன் இயல்பான சித்சொரூபத்தை மறந்து தூல உடலே நான் என நினைத்து கண்டதே காட்சி, கொண்டதே கோலம் என வாழும் மனிதருக்கு மரணபயம் எப்போதும் உண்டு. மரணபயம் போக்க, மரணத்தை வென்று மரணமில்லாப் பெருவாழ்வு பெற்ற மகேசனது திருவடிகளைப் பற்றி இருப்பதே சாலச்சிறந்தது எனலாம். மரணபயமில்லா மகேசன் யார்? எங்கு உள்ளார்? உண்மையில் இறப்பை ஒழிக்க முடியுமா? அல்லது அது ஒரு தத்துவமா? என வினவுங்கால்; புராணங்கள் மூலம், சுகர், வாமதேவர், மார்க்கண்டன், அனுமன் ஆகியோர் சிரஞ்சீவிகள் என அறிகிறோம்.

மேலும், தமிழகத்தில் தோன்றிய காரைக்கால் அம்மையார் முதல் ரமணர் வரை எல்லா அருளாளர்களும் மரணமில்லாப் பெருவாழ்வு பற்றிப்

பல பாடல்களில் ஒரே கருத்தை வலியுறுத்தியுள்ளதைக் காணலாம். ரமணரின் மங்கலப் பாடலுக்கும், அவர் பெற்ற இறவாமை என்ற சித்தி நிலையை தமிழ்ச் சான்றோர்களது சில பாடல்கள் மூலம் விளக்கம் பெறலாம். மற்றபடி இவர்களை ஒப்பீடு செய்வது கட்டுரையின் நோக்கம் அல்ல.

மரணமிலாப் பெருவாழ்வுக்கென்றே கங்கணம் கட்டி வந்த வள்ளலார்;

> மரணமிலாப் பெருவாழ்வில் வாழ்ந்திடலாம் காண்டீர்!
> உண்மை; வெறும் புகழ்ச்சி இல்லை; பொய் புகலேன்
> சத்தியம் சொல்கின்றேன்

என ஆணையிட்டு மக்களைக் கூவி, கூவி அழைத்தாரே? செவிமடுத்தவர் எத்தனைப்பேர்? ஒருவரும் இல்லையே? பதினெண் சித்தர்கள் பாடல்களில் பலவாக இறவாமைக்குறிப்புகள் உள்ளன. திருவருணையில் அடக்கமாகியுள்ள, இடைக்காட்டுச் சித்தர்,

> சாகாதிருப்பதற்குத்தான் கல்வியன்றோ
> வாகான மெய்கல்வி வகுத்த நீ கல்மனமே

என்ற பாடலைப் பார்க்கும்போது, கல்வி என்பது சாவாமை கற்பதே என்பது புலனாகிறது. திருவாலங்காட்டில் காரைக்கால் அம்மையார் சிவனின் ஆனந்தத் தாண்டவத்தைக் காண்கிறார்; இறைவர், வேண்டும் வரம் யாது? என்று கேட்க,

> பிறவா வரம் வேண்டும் பிரியாதவினையாலே
> பிறந்துவிட்டால் - உனை மறவாத மனம் வேண்டும்

என்று பாடுகிறார்.

பிறவாதிருக்க வேண்டும் என்று சொல்லாத ஞானிகளே இல்லை. ஆனால் இறவாமை வேண்டும், இதுதான் பிறவாமையாகும் என்று கூறிய ஞானிகள் சிலரே. மரணமிலாப் பெருவாழ்வு என்றால்

கற்பகோடி ஆண்டுகள் தூல உடல் அழியாமல் இருக்க வேண்டும் என்பது பொருள் அல்ல. தூல உடல் பஞ்ச பூதங்களால் ஆனது. இறுதியில் இவ்வுடல் மீண்டும் பஞ்ச பூதங்களாக மாறிவிடும். இயற்கையில் உள்ளது எதுவும் அழிவதில்லை, உருமாறுவதுதான். உடலோடு வாழும்போதே, உடல் ஸ்மரணை அற்று, தான் சுத்த அறிவாக, தனக்கு அன்னியமாய் எதுவும் இல்லாமல், பெருவெளியாய், ஆத்ம ஜோதியாய் தன் இயல்பான இருப்பை சதா உணர்ந்து கொண்டே இருப்பதாகும். பூரணமாகி - பேரொளியில் ஒன்றி ஒளியாகி விடுவது தான் மரணமிலாப் பெருவாழ்வு. இது மிகவும் நுட்பமான விஷயம் ஆனதால், எப்போதும் சந்தேகம்; அவநம்பிக்கை தோன்றுவதைத் தவிர்க்க முடியாது. காரணம் நாம் அபபக்குவராக இருப்பதுதான். பாடலைப் பாருங்கள்

சந்தமும் வேதமொழி யாது ஒன்று பற்றினது
தான்வந்து முற்றும் எனலால்;
ஜகமீது இருந்தாலும் மரணம் உண்டு என்பது
சதா நிஷ்டர் நினைவதில்லை;
சிந்தை அறியார்க்கு ஈது போதிப்பது அல்லவே
செப்பினும் வெகு தர்க்கமாம்!
திவ்விய குண மார்க்கண்டர், சுகர், ஆதிமுனிவர்கள்
சித்தாந்த நித்யர் அலரோ!

- தாயுமானவர்.

எல்லா உயிரும் தம் உயிரே என்ற அனுபவம் வராதவரை யாக்கைக்கு பிறப்பு, இறப்புண்டு. சித்தர் நெறியில் உயிருடன் வாழும்போதே செத்துப்பழகுதல் ஆகும். சாகப் பழகுவது என்ன அவ்வளவு சுலபமா?

செத்து நீ தினம் பழகஇந்திரியம் செயலடங்கும்
ஒத்திருக்க மனத்தோட ஒருவழியாய் மனமிறக்கும்
மனம் இறக்கக் கற்பதற்குச் சித்திபல பயில வேண்டாம்
மனம் இறந்த நிலை ஒன்றை நினைக்கின் அக்கணமே
சித்தி

- சட்டைமுனி

ஆழ்ந்த உறக்கம் என்பது மனம் இறந்த நிலைதானே? தூங்குவது எதற்காக தூங்குகிறோம்; அது வேண்டும், இது வேண்டும்; என்றா தூங்கப் போகிறோம். எல்லாவற்றையும், விலக்கிவிட்டு, உடலை மறந்து தூங்குவதுதான் சுகம் என்பது எல்லோருடைய அனுபவம். அருளாளர்களது பாடல்களுக்கு இலக்கணமாய், அவற்றிற்குச் சாட்சியாக பகவான் ரமணரின் அவதாரம் நம் காலத்தில் நிகழ்ந்தது. பூவுலகில் வந்து அவதாரஞ்செய்தார் - என்றால் மேல் இருந்து கீழிறங்குவதைக் குறிக்கும். இதுவே கடைசிப் பிறப்பானதால், கருவிலே திருவாகி, முன்பு தவமியற்றி முடித்தவர். ஆதலால் முன்னோர்களது மெய் மொழிகளுக்குச் சான்றாய் இப்பிறப்பு அமைந்தது என ஊகிக்கலாம். உயிர்களின் ஆன்மிகப் பரிணாம வளர்ச்சியில் பல படிநிலைகள் உண்டு. எந்த ஒன்றில் மனம் ஒன்றிப் பொருந்துகிறதோ அதில்தான் பூரண திருப்தி என்பதை அடைய முடியும். மனமும் ஐம்புலன்களும் ஒன்றிப் பொருந்துவது இரண்டு இடங்களில் மட்டும்தான்.

காமத்தில் கலவியின் உச்சத்தில் சில விநாடிகள் தன்னை மறந்து புலன்கள் ஒன்றுபடுகின்றன; அதுவே சிற்றின்பம். அதனாலேயே மனம் மீண்டும், மீண்டும் காமத்தை நாடுகிறது. இறைவனிடம் லயிப்பதும் ஒருவகைக் காமமே. அதனால்தான் கோதை நாச்சியார் மற்றை நம் காமங்கள் மாற்றேலோர் எம்பாவாய் என்று பாடினாள். காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி என்பதெல்லாம் அகத்துறைப் பாடல்களாகும். அது பக்தியின் உன்னத நிலை. மனமே மாயையின் தாய்; மனம் இறந்தோர்க்கே பிறவாமை, இறவாமை கிட்டும் சொல்வது யார்? வடலூர் வள்ளல் பிரான் பாடிய பாடல் இதோ!

குருநெறிக்கே என்னைக் கூட்டிக்கொடுத்தது கூறரிதாம்
பெருநெறிக்கே சென்றபேர்க்குக் கிடைப்பது; பேய் உலகம்
கருநெறிக்கு ஏற்றவர் காண்பதற்கரியது
பெரியதோர் அருட்சோதியைப் பெறுதலே

*எவர்க்கும் அரியபேறு, மற்றவையெல்லாம்*
*எளியவே! அறிமின்! உரிய இம்மொழி*
*மறைமொழி சத்யம் உலகீர்!*

உயர் ஞான நிலையை அடைய முயற்சி செய்வோர் கோடிக்கு ஒருவரோ, இருவரோ இருக்கலாம். அதில் வெற்றி பெற்றவர் யார்? அந்த பலகோடி பேர்களில் ஒருவரான ரமணர் செய்த பேறுதான் என்ன?

*தானமும் தவமும் தாம் செய்வராயின்*
*வானவர் நாடுவழி திறந்திடுமே.*

திருஞான சம்பந்தப் பெருமான் ஒரு பதிகத்தில்,

*ஏவார் சிலை எயினனுவாகி எழில் விசயர்க்கு . . .*
*. . . சாவாதவர், பிறவாதவர் தவமே மிக உடையவர்*
*மூவாத பன்முனிவர் தொழு / முது குன்றடைவோமே.*

என்பார். இறவாதவர் - பிறவாதவர் யார் என்று பார்த்தால் தவமே மிக உடையவர் என்பது புலப்படும்.

*கூற்றம் குதித்தாலும், கைகூடும் நோற்றலின்*
*ஆற்றல் தலைப்பட்டவர்க்கு*

தவத்தில் தலைப்பட்டவர் - வெற்றி பெற்றவர்க்கு இறப்பையும் வெல்ல முடியும் என்கிறார் வள்ளுவர். தவம், நோற்றல் என்பது பெருநிலை. தவத்திற்கு மூலதனம் அன்பு, கருணை, அருள் எனலாம். ஞானிகள் செய்யும் தானமே அருள் எனும் கருணைதான்.

*உற்றநோய் நோன்றல்; உயிர்க்குறுகண் செய்யாமை*
*அற்றே தவத்திற்கு உரு*
*கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி*
*எல்லா உயிரும் தொழும்*

கொல்லாமை என்றவுடன் பிற உயிரைக் கொல்லுவதையே பொருளாகக் கொண்டு விடுகிறோம். அதேபோல் புலால் மறுத்தானை என்பது மரக்கறி சாப்பிடுவது என்று எண்ணுவதும் பாலர் பாடம். புலால் மறுத்தானை என்பது இந்த உடலே நான்

என நினையாமல் வாழ்வது. பாலர் பாடத்திலிருந்து பெருநிலைக்கு மேலே செல்ல வேண்டும். அதுதான் தவம் - நோற்றல். புலால் உண்ணாதவனை ஒரு உயிர்கூடத் தொழவில்லையே இதை நாம் கண்கூடாகப் பார்க்கிறோமே?

தவஞ்செய்வார் தங்கருமஞ்செய்வார் மற்றல்லார்
அவஞ்செய்வார் ஆசையுட் பட்டு!!

கொல்லான் என்பதற்குப் பொருள்காணும் போது உயிருக்கு ஊறு செய்யாமையும் சேரவேண்டும். எவ்வுயிருக்கும் துன்பம் செய்யாமல் இருக்க முடிகிறதா? இக்குறட்பாக்களின் செயல்முறை அவரவர் வாழ்வில் நடைமுறையில் உண்டா? என்பதை அவரவர்களே சோதித்துக் கொண்டால், இச்சோதனையில் வெற்றியடைவது தான் கூற்றம் குதித்தல் கைகூடும் நிலை எனலாம்.

பிறர் துயரம் தன் துயரமாகச் செயற்படும் நிலை இது. கருணை, அன்பு பற்றிப் பேசுவதாலோ, எழுதுவதாலோ பயனில்லை. ஒவ்வொரு விநாடியும் செயலிலும் சொல்லிலும் பின்பற்ற முடிகிறதா என்று பார்த்தால் அது ரமண பகவானின் 54 ஆண்டுகால அன்றாட வாழ்வியல் நெறியாக உள்ளதைக் காணலாம். ஆக ரமண பகவானே மரணபயம் இல்லா மகேசன். இறவாமை பெற்ற அறஆழி அந்தணர் என துணிந்து கூறலாம்.

தொடரும்

## ரமணோதயம் காப்பு நிதி

## தொடரும் நன்கொடையாளர்கள்

| | |
|---|---|
| திருமதி காயத்ரி சுப்ரமணியன், சென்னை 24 | 1000 |
| திரு V. பசுபதி, சென்னை-20 | 1000 |
| திருமதி உமா லக்ஷ்மிநாராயணன் | 2000 |

# கோபம்–சாபம்

**ஆகுரா**

சோழ நாட்டு தென்கரைத் தலம் - திருக்களர். திருத்துறைபூண்டி - மன்னார்குடி சாலையில் உள்ள சம்பந்தர் பாடல் பெற்ற திருத்தலம்.

பராசரர், தூர்வாசர் வழிபட்ட திருத்தலம். ஈஸ்வரன் பாரிஜாத வன ஈஸ்வரர், அம்பாள் அமுதவல்லி.

களரி என்றால் கூடம் அல்லது அரங்கம் என்று பெயர். தூர்வாச முனிவருக்கு நடராஜர் பிரம்ம தாண்டவ தரிசனம் தந்து அவரது சினம்/சபிக்கும் தன்மை இரண்டையும் போக்கி அருளிய இடம். தூர்வாசருக்கு நடனக்காட்சி அளித்த வடிவமும் எதிரில் தூர்வாசரின் கை கூப்பிய திருமேனியும் காட்சியாக அமைந்துள்ளது.

கோவிலூர் மடாதிபதி வீர சேகர ஞான தேசிகர் (வீர சுப்பையா தேசிகர்) அவர்களுக்கு சமாதி ஆலயம் காணப்படுகிறது. இவர் திருக்களர் ஆண்டவர் எனப் போற்றப் படுகிறார். இவர் இக்கோயிலுக்கு அநேக கைங்கரியங்கள் (குளம் சீரமைத்தது, புதிய தேர்கள் உருவாக்கியது போன்றவை) செய்துள்ளார் எனத் தெரிய வருகிறது. இன்றும் அவரால் ஏற்படுத்தப்பட்ட வேதபாடசாலை, வேதாந்த மடம், பசுமடம், நித்ய பூஜைகள், அபிஷேகங்கள் போன்றவை மிகவும் சிறப்பாக நடைபெற்று வருவதை காணும்போது இவரைப் பற்றி அறிய ஓர் ஆர்வம் நம்முள் எழுகின்றது.

சுவாமிகள் கோவிலூர் தலைமை மடாதிபதியாக இருந்ததுடன் இவரின் மேற்பார்வையில் பல மடாலயங்களின் அதிபதிகள் சிஷ்யர்களாக வாய்த்திருந்தனர். பகவான் ரமணர் இவரைப் பற்றிக் கூறும்போது இவர் ஓர் சிறந்த வேதாந்தி எனவும் இவர் இந்தியிலிருந்த ஆத்ம புராணம் எனும் நூலை தமிழ்

படுத்தியிருக்கிறார். ஞான வாசிட்டம் போன்ற அறிய வேதாந்த நூல்களுக்கு உரை எழுதியுள்ளார் என்று சிறப்பித்துக் கூறியுள்ளார். இவர் தமது சீடர்களுடன் விருபாக்ஷ குகையில் பகவான் ரமண மகரிஷிகளைத் தரிசித்துள்ளார். பகவானின் அணுக்கத் தொண்டரான குஞ்சு சுவாமி அவர்களும் அவரது 'எனது நினைவுகள்' என்ற நூலில் இவரைப் பற்றிக் கீழ்க்கண்டவாறு கூறுகிறார்.

"நான் ஒருமுறை யாத்திரையாகச் சில இடங்களுக்குச் சென்றபோது பேரையூர் ஸ்ரீசாந்தலிங்க ஸ்வாமிகள் மடத்தில் ஸ்ரீவீரசுப்பைய ஸ்வாமிகளைத் தரிசித்தேன். ஸ்ரீபகவானைப் பற்றி விசாரித்தார். என்னிடம் இருந்த நோட்டுப் புத்தகத்தில் ஸ்ரீபகவான் எழுதியுள்ள 'உள்ளது நாற்பது' பாடல்களை ஸ்ரீபகவானே தம் கரத்தினால் அழகுற எழுதியிருப்பதைப் பார்த்து என்னைப் படிக்கச் சொன்னார். முதற்பாட்டான 'உள்ளதல துள்ளவுணர் வுள்ளதோ' என்ற பாடலையே மூன்றுமுறை திரும்பத் திரும்பப் படிக்கச் சொல்லி ரசித்தார். இவ்வளவு அழகாக அடி, தொடை, தளை முதய இலக்கணங்களும் சிறப்பான பொருளும் அமைந்திருக்கிறதே! உங்கள் ஸ்வாமி, சும்மா இருப்பதில்தான் வல்லவர் என்று எண்ணியிருந்தேன். இவ்வளவு உயர்வாக கவிதை எழுதுவதிலும் மேன்மையானவராக இருக்கிறாரே என அதிசயித்தார். ஸ்ரீபகவானைப் போல் சும்மா இருப்பதென்பது எல்லோராலும் முடியாது.

தற்சமயம் என்னை வைத்தியர் பூரண ஓய்வில் இருக்கச் சொல்லி இருப்பதால் படிக்க, எழுத முடியாமல் சும்மாவிருப்பது மிகச் சிரமமாக உள்ளதால் நீங்கள் இருக்கும்வரை ஸ்ரீபகவான் நூல்களை எனக்குப் படித்துக் காண்பிக்க வேண்டுமெனக் கூறினார். அங்குள்ள சாதுக்களிடம் ஸ்ரீபகவானைப் பற்றி குறிப்பிட்டு, பள்ளியில் படித்துக் கொண்டிருந்தவர்; எந்த ஒரு குருவினிடமும் வேதாந்த பாடம்

கற்காதவர்; ஆகையால் அவருக்கு வேதாந்தமொன்றும் தெரியாதென்பது சிலருடைய எண்ணம். ஆனால் அவர் எழுதியுள்ள நூல்களில் வேதாந்த சம்பிரதாயச் சிறப்பும் அநுபவ ஆழமும் எவ்வளவு தெளிவாக இருக்கிறது என்று ஸ்ரீபகவானின் பெருமையை உவகையுடன் கூறினார். என்னையும் குறிப்பிட்டு மலையாளியாகிய இவர் தமிழ் எப்படிப் படிக்கிறார் பார்த்தீர்களா? அதுவும் இவர் இருக்கும் இடத்தின் மகத்துவம்தான் என்று சிலாகித்துப் பேசினார்.”

வீரசுப்பைய சுவாமிகளுக்கு தன்னுடைய குணாம்சத்தில் ஒரு சிறிய குறைபாடு இருந்தது. அதாவது சட்டென்று கோபமும் ஆத்திரமும் ஏற்படுவதுண்டு. இதைப்போக்க பல அன்பர்களின் ஆலோசனையை கேட்பதுண்டு. ஒருமுறை திருக்களர் ஈஸ்வரனை தரிசித்தால் சினம் தனியும் என்று கேள்விப்பட்டார். துர்வாசருக்கும் இங்குதான் கோபத்தில் சாபமிடும் குணமும் நீங்கியது. சுவாமிகள் உடனே திருக்களர் சென்றடைந்தார். அச்சமயம் அக்கோயிலின் நிலை மிகவும் சிதிலமடைந்த நிலையில் இருந்ததைக் கண்டார். சுவாமிகள் இயல்பாகவே அநேக கோயில்களுக்கு திருப்பணிகள் செய்விப்பதை கடமையாகக் கொண்டிருந்தவர். ஆதலால் இங்கும் குளத்தை சீரமைந்து தேர் இல்லாத கோயிலுக்கு புதிய தேர்கள் அமைத்துக் கொடுத்தார். புதிய தேர் முதல் முதலாக வடம் பிடிக்கப்பட்டு கோயிலை வலம் வர வேண்டிய நேரத்தில் அன்பர்கள் தேருக்கு இரத்த பலி (ஆடு, கோழி போன்றவைகள்) கொடுக்கப்பட்டாலே தேர் நகரும் இல்லையேல் இடையில் தேரோட்டத்தில் தடைவரும் என்று கூறினார்கள். இதற்கு சுவாமிகள் உயிர்பலி கொடுப்பது தவறு என்று கூறி பலிக்கு ஒப்புக் கொள்ளவில்லை. வேறு வழியின்றி தேரை வடம்பிடித்து இழுக்கலாயினார். சற்று தூரத்திலேயே தேர் நின்று

*விட்டது. மீண்டும் அன்பர்கள் சுவாமிகளிடம் உயிர்பலிக்கு முறையிட்டனர். சுவாமிகள் எந்தப் பிராணியை பலியிட்டாலும் அதனுடைய தாய்க்கு வருத்தம் நேரிடும். அது மகாபாவம் எனக்கோ எந்த உறவும் இல்லை. என்னை பலியிட்டால் எனக்காக வருந்த யாரும் இல்லை. எனவே அவசியப்பட்டால் என்னைத் தேர்க்காலில் பலியாகக் கிடத்துங்கள் என்று சாந்தமாகக் கூறினார். பொதுவாக இச்சமயங்களில் சுவாமிகள் கோபங்கொண்டு ருத்ர தாண்டவமே ஆடிவிடுவார். திருக்களர் ஈஸ்வரனின் அருளால் அவருக்கு அத்தகைய சினம் எழுவது நின்றுவிட்டது. அன்பர்கள் மீண்டும் தேரை இழுக்க தேரும் கோயிலை வலம் வந்து நிலைக்கு வந்து சேர்ந்தது. அப்போது மகா தீபாராதனை நடைபெற்றது. அதைப் பார்த்தவண்ணமே சுவாமிகளின் உயிர் பிரிந்தது. இந்த நிகழ்வை காஞ்சி மடாதிபதி பூஜ்ய ஸ்ரீ சந்திரசேகர சரஸ்வதி சுவாமிகள் சென்னையில் ஒருமுறை தமது அருளுரையின்போது நினைவு கூர்ந்தது குறிப்பிடத்தக்கது.*

★★★

*பக்த ஏகநாதர் மராட்டியத்தில் வாழ்ந்த காலம்.*

*ஒருசமயம் சூதாடிகள் சிலர் சூதாடிக்கொண்டு இருக்கையில் இடையில் அவர்களுக்குள் வழக்கு முற்ற கோபத்துடன் சண்டயிடலாயினர். அப்போது ஒருவன் அவர்களிடயே சமாதானம் செய்ய முயன்று கோபம் கொள்ளாதீர்கள் என்று சமாதானப்படுத்த முயன்றான். சண்டையில் கோபத்துடன் இருந்தவன், “நான் என்ன ஏகநாதரா? என்ன செய்தாலும் கோபம் கொள்ளாமல் இருக்க” என்றான்.*

*அடுத்து ஒருவன் அப்படி ஒருவர் கோபம் கொள்ளாமல் இருந்தால் மனிதனாக இருக்க முடியாது என்றான். அதற்கு முன்னவன் ஆம் ஏகநாதர் மனிதரே அல்ல தெய்வம் என்றான்.*

இதைக் கேட்டுக் கொண்டிருந்த சூதாடிகளில் ஒருவன், “அப்படியா நான் அவரை பரிட்சித்து பார்க்கப் போகிறேன். அவர் அப்படிப்பட்டவராக இருக்க இயலாது? இதற்காக நான் சூதில் ஜெயித்த அனைத்தையும் பந்தயமாக கட்டத் தயார்” என்று கிளம்பினான்.

ஏகநாதர் தனது நித்ய பூஜைக்கு முன்னர் கோதாவரி நதியில் நீராடுவது வழக்கம். அவர் அன்று குளித்துக் கரையேறும் வழியில் வீட்டின் மாடிமீது இருந்து பந்தயம் கட்டிய சூதாடி, வாய் நிறைய தாம்பூலம் இட்டு எச்சில் கூட்டி அவர்மேல் உமிழ்ந்தான்.

அவர் வாய்பேசாது மீண்டும் கோதவரி நதியில் நீராடி தன் உடலை சுத்தப் படுத்துக்கொண்டு கரையேறவும் சூதாடி மீண்டும் எச்சில் கூட்டி தாம்பூலத்தை உமிழ்ந்தான். ஏகநாதர் மீண்டும் அமைதியாக தன்னை சுத்தப் படுத்திக்கொள்ள நதிக்கு சென்று வருவதும் தொடர்ந்து இவன் அவர் மீது காரி உமிழ்வதும் நடந்த வண்ணமாக இருந்தது.

மதியம் சூதாடி மேலும் உமிழமுடியாது என்பதான நிலை எட்டியதும், களைத்துப் போய் ஏகநாதரிடம் ஒருவழியாக சரண் அடைந்தவனாகி “அய்யா நான் இப்படி தொடர்ந்து காரி உமிழ்ந்தும் உங்களுக்கு ஏன் கோபமே வரவில்லை?” என்று பணிவன்புடன் கேட்க, அவர் “தம்பி நான் சுத்தமான தேகத்துடன் மட்டுமன்றி தூய்மையான மனத்துடன் பூஜை செய்ய விரும்புகிறேன். உடல் அழுக்கை நதியில் கழுவி விடலாம். தங்களை கோபித்துக் கொண்டு தூஷிப்பதின் மூலம் என் மனத்தில் ஏற்படும் அழுக்கை எங்கு சென்று சுத்தப்படுத்த முடியும்?” என்றதும் சூதாடி அவரின் பாதங்களைத் தொட்டு நீங்கள் உண்மையில் தெய்வம் என்று தொழுது சென்றான்.

★★★

சமீபகாலத்தில் வேத விற்பன்னர் ஒருவர் இருந்தார். அவரது மனைவி மிகவும் கோபப்படுபவள் அடிக்கடி ஆத்திரத்தில் இரைந்து ஆர்ப்பாட்டம் செய்பவள்.

ஒருமுறை அவரைக் காண அவரது நண்பர் வந்திருந்த சமயம் வேதப் பண்டிதரின் மனைவி வழக்கம்போல் ஆத்திரத்துடன் கையில் ஒரு சிறிய கத்தியுடன் பண்டிதரிடம் பாய்ந்து வந்தாள். பண்டிதரோ அவளைத் துர்க்கையாக பாவித்து ஒரு சுலோகம் சொல்ல அவரது மனைவியும் ஆத்திரம் அடங்கியவளாய் அமைதியுற்றாள். இதனைக் கண்ட பண்டிதரின் நண்பர் என்ன இது இவ்வளவு சாந்தமாக இருக்க எங்கே கற்றுக் கொண்டீர்கள்! என்று ஆச்சரியப்பட்டார்.

அதற்கு பண்டிதர் ஐயா, முன்பெல்லாம் அவள் ஆத்திரத்துடன் ஆர்ப்பாட்டம் செய்யும்போதெல்லாம் நானும் பதிலுக்கு உணர்ச்சிவசப்பட்டு இரைந்து பேசுவதுண்டு. அதன்மூலம் நானும் அவளைப்போல் ஆனது தவிர வேறு பயன் ஒன்றும் ஏற்படவில்லை. இப்படியாக ஒருமுறை அவள் ஆத்திரத்துடன் வரும்போது வெளியில் திரிந்துவிட்டு வந்த களைப்பில் செய்தித்தாள் படித்த வண்ணம் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்துவிட்டேன். சற்று நேரம் கழிந்தபின் விழிப்பு நிலையில் அவள் தொடர்ந்து கத்தி ஆர்ப்பாட்டம் செய்து கொண்டிருந்ததை கண்டேன். நான் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்ததால் அவள் கத்தியதும் தெரியவில்லை. உறக்கத்தில் ‘நான்’ எனும் உணர்வும் எனக்குத் தோன்றததால் பதில் கொடுப்பதற்கு ‘நானும்’ இல்லை.

ஆழ்ந்த உறக்கத்தில் அவளும் உலகமும் ‘நான்’ என்ற அகந்தையும் அற்ற நிலை அமைதியைக் கொடுத்திருந்தது. அதேநிலையை விழிப்புடனும் பழகிக் கொண்டேன். இதுவே என் மனைவியுடன் நான் கோபப்படாமல் இருக்க முடிந்ததற்குக் காரணமாகும்.

மேற்கண்ட மூன்று நிகழ்வுகளில் கோபமும் சாபமும் விளக்கப்படுகிறது. கோபம் என்பது பல்வேறு அவஸ்தைகளில் ஒன்று. முதலில் துர்வாசருக்கு நடராஜர் பிரம்ம தாண்டவம் ('நீ ஆன்மா' என்ற சிற்குறிப்பு) காண்பித்து அவரது சினத்தை தணியச் செய்துள்ளார். வீரசுப்பைய சுவாமிகளும் திருக்களர் இறைவன் அருளால் கோபம் தணியப் பெற்றார். ஏகநாதரின் மனம் சார்ந்த தூய்மை கோபம் எனும் அவஸ்தையிலிருந்து காத்துள்ளது. இறுதியாக வேத பண்டிதரின் சாந்த குணத்திற்கும் ஆன்ம நிலை நிற்றலே ஏதுவாக இருந்துள்ளது. பகவான் ஆதிசங்கரரின் தக்ஷிணாமூர்த்தி ஸ்தோத்திரத்தை தமிழ்ப் படுத்தியுள்ளார். அதில் ஒரு சுலோகம்

*குழவிமுன் நனவு முன்னாக் கூறுபல் அவத்தை எல்லாம்*
*சுழலினுங் கலந்தி ருந்தே சொலிக்கும்உள் அகமாய் நாளுங்*
*கழல்விழு வோர்க்கு யார்தன்னைக் காட்டுவன் சிற்கு றிப்பால்*
*தழல்விழிக் குருவாம் அந்தத் தக்ஷிணா மூர்த்தி போற்றி.*

பல்வேறு அவஸ்தைகள் சுழன்று கலந்து துன்பத்தை உண்டாக்கினாலும் அவைகள் எதுவுமே பாதிக்காவண்ணம் தனது பாதங்களில் சரணடை வோர்க்கு, 'சதா ஒளிர்ந்து கொண்டிருக்கும் ஆன்மாவே நீ' என்று தனது சிற்குறிப்பால் காட்டிக் கொடுப்பவன் 'தழல்விழி' குருவாம் தக்ஷிணாமூர்த்தி என்று கூறப்படுகிறது.

இத்தகைய ஆன்மாவைக் காட்டிக் கொடுக்கும் சிற்குறிப்பே நடராஜரின் பிரம்ம தாண்டவம் ஆகும். இந்த 'நான்' ஒடுங்கிய ஆன்மாவில் நிற்றலே எல்லா அவஸ்தைகளுக்கும் விடுதலை என்பதன்மூலமே அனைவரும் தங்களது சினமும் ஒடுங்குப் பெறுவர் என்பதாகும்.

# ரிபு கீதை

## தியாகராஜன்

அத்வைத சொரூபத்தின் அபேத நிஷ்டை உரைக்கும் ரிபு கீதையில் 26வது அத்தியாயத்தை மீண்டும் மீண்டும் பாராயணம் செய்தால், அது நம்மை சமாதி நிலைக்குக் கொண்டு செல்லும் என்று பகவான் அருளியுள்ளார்கள். அந்த அத்தியாயத்தின் பாடல்களை, அவை தொடர்பாய் பகவான் அவ்வப்போது அருளியுள்ள விளக்கங்களோடு அடியவர்களுக்கு அர்ப்பணிக்கிறோம்.

*எதுதானே யகண்டசதா கார மாகு*
*மெதுதானே யகண்டசிதா கார மாகு*
*மெதுதானே யகண்டசுகா கார மாகு*
*மெதுதானே யத்துவிதா கார மாகு*
*மெதுதானே யான்மாவுக் கபின்ன மாகு*
*மெதுதானே யகண்டபரப் பிரம மாகு*
*மதுதானே நானென்னு நிச்ச யத்தா*
*லம்மயமா யநவரதஞ் சுகித்தி ருப்பாய்* 26/29

*எதுதானே யானாகு நீயு மாகு*
*மெதுதானே மற்றுமுளோ ராரு மாகு*
*மெதுதானே யகிலவதிட் டான மாகு*
*மெதுதானே யணுவுமிலா தேக மாகு*
*மெதுதானே யத்யந்த சுத்த மாகு*
*மெதுதானே யகண்டபரி பூன்ற மாகு*
*மதுதானே நானென்னு நிச்ச யத்தா*
*லம்மயமா யநவரதஞ் சுகித்தி ருப்பாய்* 26/30

*[பகவத் வசனாம்ருதம் - பாகம் 1- பக்.171 - பதிப்பு 2004] மனம் பலவிதமா யிருக்கும். அளவுக்குட்பட்டுப் பல வடிவங்களூறும் மனத்தால் பூரண ஸ்வரூபத்தைக் கிரகிக்க முடியாதது. ஸர்வக்த்வமென்பது சர்வமும் எதுவோ அதுவாயிருப்பதே. சர்வம் எல்லாம் - என்பது மன நினைவேயாகும். அறியப்படுவதும் அறியப்படாததும் சேர்ந்தே எல்லா மென்பது. மனத்தைக் கடந்தவிடத்தே நமது ஸ்வரூப மயமாயிருப்பது விளங்கும். இப்பொழுது நாம், ஞானம், அறிவு என்று விவகரிப்பது கண்ட ஞானமே. கண்ட ஞானஸ்வரூபமாம் ஆத்மாவை கண்ட ஞானமாம் மனம் எவ்வாறு கிரகிக்க முடியும்? அறிபவன் நானென்னும் அகந்தை அற்றால் இருப்பது பரிபூரணமே என்பது தானே துலங்கும்.*

*[பகவத் வசனாம்ருதம் - பாகம் 1 - பக்.219 - பதிப்பு 2004] ஸ்ரீ பக: நிர்விகல்ப சமாதியே அறிவு, அறியாமை இரண்டையும் விளக்கும் சுத்த சைதன்ய ஸ்பூர்த்தியாம். இவ்வனுபவம் ஒளி இருள் இரண்டையுங் கடந்தது. இருளைக் கடந்தது அது என்பதை ஒப்புவோம்; ஒளியையும் கடந்ததென்பது எவ்வாறெனின், இப்பொழுது மனோமயத்தில், ஒளி வழியேதான் எதனையும் காண்கிறோம்; ஸ்வரூபானுபவத்திலோ ஒளியென்பது தானே ஒளிரும் ஆத்மப் பிரகாசமே.*

*[பகவத் வசனாம்ருதம் - பாகம் 2 - பக்.67 - பதிப்பு 2000] நான் என்னும் அகந்தை தூக்கத்தின்போது இல்லை; விழிப்புற்றதும் அது தேகாகாரமாகத் தோன்றி, பற்பல விஷய நினைப்புகள் உறுகின்றது. இவ்வாறு தேக உலகங்களுடன் சம்பந்தப்பட்டு இயங்குவதே அஹம் விருத்தி எனப்படும். அகம் என்பது ஆத்மா ஒன்றையே குறித்து விளக்குங்கால் அது அஹம் ஸ்புரணம் எனப்படும். ஞானிகளிடம் அது எப்போதும் இயல்பாகவே விளங்கிக் கொண்டிருக்கும்.*

அதுவே ஞானமென்றும், பராபக்தி நிலையென்றும் சொல்லப்படும். அதனையே அகண்டாகார விருத்தி யென்றும் சொல்வர். இவ்விடத்தே 'விருத்தி' என்பதனால் அதனைப் பிற விருத்திகளைப் போன்றதாய் எண்ணக் கூடாது. சாதாரணமாய் விருத்தி என்னும் சொல், ஏதோ ஓர் விஷயத்தைப் பற்றி எழுவதும் ஒடுங்குவதுமாம் நினைப்பையே குறிக்கும். அது மனோ மயம். அகண்டாகார விருத்தியோ மனத்தைக் கடந்து ஆத்மாகாரமாய் இடையறாது இயல்பாக விளங்குவதாம். அதுவே ஞானிகளின் இயல்பாம் நிரந்தர அனுபூதியாம்.

[பகவத் வசனாம்ருதம் - பாகம் 2- பக்.292 பதிப்பு 2000] தூக்கத்தில் ஸ்வரூபப் பிரஜ்ஞை தொடர்ந்திருந்த போதிலும் அது அஞ்ஞான மறைப்பைப் போக்குவதில்லை. (அகண்டாகார) விருத்தி ஞானமே அஞ்ஞானத்தை ஒழிக்கும். சாதாரண வெயிலில் தீ உண்டாகாது. பூதக் கண்ணாடி மூலம் ஏகாக்ரமாகும் ஒளியிலேயே தீயுண்டாகும்; தன் கீழேயுள்ளதை எரித்துவிடும். அவ்வாறே ஸ்வரூப ஞானம், அஞ்ஞானத்தைப் போக்காது. தியானத்தால் அதி சூக்ஷ்மமான அகண்டாகார விருத்தியே அஞ்ஞானத்தை அறவே அகற்றும். "அனைத்தின் சாக்ஷியாய்த் தானே துலங்கும் அவ் ஆத்ம ஸ்வரூபத்தைத் தூல புத்தி கொண்டு அறிய முடியாது. ஸமாதியில் அத்யந்த சூக்ஷ்ம விருத்தியினால் மிக நிர்மல புத்தியினர் ததாகாரமாய்த் தன்னை உணர வேண்டும்" என்று இப்பொருள் விவேக சூடாமணியிற் கூறப் பெற்றுள்ளது.

[பகவத் வசனாம்ருதம் - பாகம் 1 - பக்.97 - பதிப்பு 2004] இருப்பது பரிபூர்ண சைதன்யமாம் பூமாஸ்வரூபமே. அது அந்தமற்றது, வரையற்றது. அதனின்று குறுகியதோர் அகந்தை உணர்வு ஏதோவோர் உபாதியைப் பற்றிக் கொண்டெழுகிறது. அதைத்தான் பாஸ (தோற்ற) உணர்வென்பர். அத்தோற்ற உணர்வை

உண்மையுணர்விற் கரைத்துவிட வேண்டும். அதுவே நாம் செய்ய வேண்டுவதெல்லாம்.

*[உள்ளது நாற்பது - பாடல் 14 - விரிவுரை-லக்ஷ்மண சர்மா -பதிப்பு 2002] தன்மை என்பது நான் என்றெழும் அகந்தை. முன்னிலை 'நீ' என்றும், படர்க்கை 'அவன்' என்றும் தோன்றும் அயல் உயிர்கள். படர்க்கை 'அது' எனப்படும் சேதனங்களும் ஆகும். இம் மூன்றில் முதலாவதாகிய தன்மையே ('நான்') முதலில் எழுவது. அது எழுந்த பின்புதான் மற்றவை தோன்றும். அது இல்லாதபோது ஒன்றும் இல்லை. தன்மையாகிய 'நான்' என்பதின் உண்மை எது என்று ஆய்வதே ஆன்ம விசாரம். இவ்விசாரத்தின் முடிவு, அகந்தையின் அழிவும் ஆத்மானுபவமும்.*

*[பகவத் வசனாம்ருதம் - பாகம் 1 - பக்.32 - பதிப்பு 2004] ஸ்ரீ பக: காண்பான் - காட்சிமயப் பிரபஞ்சானுபவத்திலேயே உழன்று கொண்டிருக்கும் நாம் அகமுக நாட்டத்தால் நமது அதிஷ்டானத்தை உணரவேண்டும். காண்பானாகிய தான் (ஆத்மா) தனக்கு அன்னியமாய்க் காணப்படும் உலகமாகிய அநாத்மாவைக் காண்பதாகத் தெரிகிறது. அவற்றுள், காண்பானை 'திருக்' என்றும், காணப்படுவதை 'திருசியம்' என்றும் சொல்வார்கள். திருக்திருசியங்களின் அடிப்படை ஒன்றாகவேதான் இருக்கவேண்டும். அவையிரண்டும் அகந்தை எழுச்சியின் விரிவே. இவ்வகந்தை அறிவான் ஆதலால் சித்தேயன்றி ஜடமாம் திருசியமல்ல; அகந்தையின் மூலஸ்வரூபமே சித்தின் உண்மை இயல்பு. காண்பான் யாரென்று பார்க்கத் தொடங்கினால், காண்பானென்று சொல்லப்படுவதெல்லாம் காணப்படும் இனமாகிக் காண்பான் மேன்மேலும் சூக்ஷ்மமாவான். இவ்வாறு காணப்படும் திருசியத்திரளை உபேக்ஷித்துக் கொண்டே போகும்போது, திருசியமென்று தள்ளுவதற் கொன்றுமின்றி, திருக்கொன்றே கேவல சின்மாத்ர*

*ஸ்வரூபமாய்ச் சுடருமிடமே பரிபூரணமாம் முடிவு நிலை.*

*[பகவத் வசனாம்ருதம் - பாகம் 1 - பக்.10 - பதிப்பு 2004] ஸ்ரீ பக: அதி சூக்ஷ்மம் என்று சொல்லப்படும் அணுவின் அமைப்பு - ரகசியத்தை - அறிவாலேதான் கண்டு பிடித்திருக்கிறார்கள். அதனால் அவ்வறிவு அணுவைக் காட்டிலும் அதி சூக்ஷ்மமானது. அறிவானாகிய ஜீவன் (தனது இயக்கமாகிய) அவ்வறிவைக் காட்டிலும் சூக்ஷ்மமானவன். அஹம் விருத்தி வடிவனாகிய அறிவானது பிறப்பிடமாம் ஆத்ம ஸ்வரூபம், எல்லாவற்றிலும் அத்யந்த சூக்ஷ்மமானது. அதுதான் அணோரணீயான் என்பதன் பொருள். பெரிதெனப்படும் பூதாகாசம் மன காசத்தில் அடக்கம், மனாகாசம் சிதாகாசமாம் ஆத்மாவில் அடக்கம். ஆகவே ஆத்மாவே பெரிதினும் பெரிது (மஹதோ மஹீயான்).*

*[பகவத் வசனாம்ருதம் - பாகம் 1 - பக்.226,227 - பதிப்பு 2004] ஸ்ரீ பக: விஞ்ஞானம் என்னும் சொல் ஆத்மஞானம், வியானம் என்னும் இரண்டையும் குறிப்பதாம். ஆத்மா சுத்த ஞானமயம். அதை அகந்தையுடன் சம்பந்தப்படுத்துங்கால் அது விஷய ஞானமாகிறது. அகந்தைத் தொடர்பற்றால் பரமாத்ம ஸ்வரூபம் உணரப்படுகிறது. அதுவும் விஞ்ஞானமென்று வழங்கப்பெறும். விஞ்ஞானமென்னும் சொல் விருத்தி சம்பந்தத்தை சூசிப்பிக்கின்றது. அதனாலேயே, ஞானி அதி சூக்ஷ்ம புத்தியால் ஸ்வஸ்வரூபத்தை உணர்கின்றானென்றும் அது சுத்த சத்வ மயமென்றும் சொல்லப்படுகிறது. விருத்திகளாய்ச் சிதறும் மனம் சுத்த மனமென்றும், ஏகாகாரமாய்க் குவிந்து தன்னிலை நிற்கும் மனம் சுத்தமனமென்றும் கூறப்படும். சுத்தமனமே பிரம்மம், ஞானியின் மனமே பிரம்மம் எனலுமாம்.*

*[பகவத் வசனாம்ருதம் - பாகம் 2 - பக்.227 - பதிப்பு 2000] ஸ்ரீ பக: தூக்கத்தின்போது அவாவொன்றுமில்லை, பந்தசிந்தை இல்லை, மோக்ஷசிந்தையுமில்லை. அவை யாவும் அகந்தை எழுந்த பின்னரே எழுகின்றன. ஆகவே, எது எழின் எல்லாப் பிரச்சனைகளும் எழுவனவோ, எது ஒடுங்கினால் பிரச்சனை எதுவுமே இலதோ, அவ்வகந்தை எதுவென உள்ளாழ்ந்து நோக்கினால், அஃதோர் பொருளே இல்லை, அதற்கோர் இருப்பே இல்லையென்று உணர்வோம். அப்போது உபாதி எதுவுமின்றி தானேதானாய்த் தனக்கயல் எதுவுமிலதாய் சுத்த பரிபூரணமாய்த் துலங்குவதெதுவோ அதுவே தோன்றி மறையாத சாச்வத உண்மையான நான். அங்கே அன்னியமெதுவும் இன்மையின், பிரச்சனை ஒன்றுமில்லை, விவகாரம் எதுவுமில்லை.*

*[பகவத் வசனாம்ருதம் - பாகம் 1 - பக்.247 - பதிப்பு 2004] ஸ்ரீ பக: நம் ஸ்வபாவமே ஆனந்தமாய் இருக்கும்போது ஆனந்தத்தை வேண்டித் தவிப்பதேன்? அத் தவிப்பொழிதலே முக்தி. சுருதிகள் அதுவே நீ (தத் த்வம் அஸி) என்று போதிக்கின்றன. அந்த ரகசியத்தை உணர்தலே அவற்றின் நோக்கமும் அவற்றாலாய பயனுமாம். அதற்குமேல், நாமேதான் 'நான்' யாரென்று உணர்ந்து அதுவே நாமாய் அமர்தல் வேண்டும். அவ்வாறன்றி 'இது நானல்ல, அதுவே நான்' என்று மனத்தால் எண்ணிக் கொண்டிருத்தல் வீண் வேலையே. பக்குவமுற்றவனுக்கு மனத்தின் மூலத்தே - அகத்தே - அன்றிப் புறத்தே யாதோர் வேலையுமில்லை.*

*[ஸ்ரீ ரமண மஹரிஷியின் பொன்மொழிகள் - பக்.168 - பதிப்பு 2004] ஸ்ரீ பக: எப்போதும் உள்ள தூய உணர்வு ஆனந்தமயமாகவே இருக்கிறது. இருப்பு, உணர்வு, ஆனந்தம் என்னும் இம்மூன்றும் ஒன்றே. அந்த ஒன்றே நாம். அதுவே நாமாக இருந்தும்கூட, அறியாமையினால் தெரியவில்லையே என்று வருந்துகின்றோம். ஆகவே,*

அவ்வறியாமை என்னும் பிரதிபந்தத்தை அகற்றினால் ஆனந்தமயமாம் நமது இருப்பு தானே விளங்கும்.

ஓம் ஸ்ரீ ரமணார்ப்பணமஸ்த்து

## பாலு மாமா



*ஸ்ரீ ரமணாச்ரம பாகசாலையில் சுமார் 40 ஆண்டுகாலம் பணியாற்றி வந்த 'பாலு மாமா' என்று ரமண பக்தர்களால் அன்போடு அழைக்கப்பட்டு வந்த பாலசுப்ரமணியன் கடந்த 16-06-2015 செவ்வாய்க்கிழமை யன்று தமது 74 வயதில் பகவான் திருவடி அடைந்தார்.*

*பணி ஓய்வு பெற்று ரமண நகரில் தமது குடும்பத்தாருடன் வசித்து வந்த பாலு மாமா முன்னதாக சிறிது நாட்கள் உடல்நிலை பாதிக்கப்பட்டு மருத்துவ சிகிச்சையில் இருந்து வந்தார்.*

*1970-களில் ஆச்ரமத்திற்கு வருவதற்கு முன்னர் இவர் வேலூரில் உள்ள ஒரு உணவு விடுதியில் பணியாற்றி வந்தார். அப்போது வேலூரில் வங்கியில் பணிபுரிந்து வந்த திரு. கணபதிராமன் (ஆச்ரம முன்னாள் காசாளர்) இவரை ஆச்ரம பாகசாலைக்கு அழைத்து வந்தார்.*

*பாலுமாமாவிடம் மிகவும் பிரியமுடன் இருந்த ஸ்ரீவிஸ்வநாத சுவாமி, "பாலு பக்தர்களுக்கு புன்னகையுடனும் மிகுந்த அன்புடனும் பரிமாறுகிறார்" என்று குறிப்பிடுவார்.*

*பாலு மாமாவை பிரிந்து வாடும் அன்னாரது குடும்பத்தாருக்கு ரமணோதயம் தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.*

# பகவான் ரமணர் கண்ட தமிழ் வேதாந்த நூல்கள்

பகவான் இயற்றிய அக்ஷரமணமாலையின் 74 ஆவது பாட்டை விளக்கும்பொழுது முகவைக் கண்ண முருகனார் வகுப்பில் ஒழிவிலொடுக்கப் பாட்டு ஒன்றினை எடுத்துக் காட்டுவார். சீவ பந்தங்களை எல்லாம் முடிவாக ஒழித்துக் கட்டிய பகவான், அருள் சக்திக்கும் சீவபோதத்துக்கும் இடையே அனாதிகாலமாக நடக்கும் போராட்டத்தைத் தனக்கு ஒரு நாடகம் போலக் காட்டி அருள வேண்டும் என்று வேண்டுகிறார். இது முடிந்துபோன விஷயம், பகவான் வாழ்க்கையில் என்பதைக் காட்ட முருகனார் ஒழிவில் ஒடுக்கப்பாடலை மேற்கோளாகக்காட்டி பழுதைப் பாம்பு என்று எண்ணி அஞ்சும் அந்த நிலை வீடுபெற்றவர் வேண்டினாலும் வருமோ என்று கூறி விளக்குவார்.

பழுதைப் பாம்பு என்ற பயம்போனால் பாவித்து
அழுது உடம்பை ஆட்டுகினும் ஆமோ - தொழில்
எழிவில் நின்ற சிவயோகி நினைத்து ஒருகால்
நீ வாராய் என்றழைத்தாலும் பதையாது என்

என்ன கற்றும் சீடன் தன் அகந்தையை அழிக்கக் குருவின் கிருபா கடாட்சம் பெற வேண்டும், அப்படிப் பெற்றால்தான் அவன் தன்னிழப்பைச் சாதிக்க முடியும் என்ற பொருளில் வரும் ஒழிவிலொடுக்கப்பாடல் இரண்டு இடங்களில் முகவைக் கண்ண முருகனார் மேற்கோளாகக் காட்டப் பெறுகிறார்.

தன்னிழப்பை என்ன கற்றுச் சாதிப்பான் சற்குருவாம்
மன்னு பெருஞ்சீயம் மதயானை - தன்னடைமேல்
சொற்பனத்தே தோன்றித் துடிப்பற்றுக் கேவலமாய்
நிற்பதுபோல் பாரான் எனின்

இதுவும் முந்திய பாடலும் இந்நூலின் முதற் பகுதியாகிய பொதுவிலும் தேசத்திலிருந்து எடுக்கப்பெற்றன.

இந்நூலின் இறுதியில் உள்ள ஒரு பாடலைக் காட்டி இதனைத் தலைக்கட்டுவோம். தற்போதத்தாலேயே ஊக்கப்பட்டு சரியை முதலியவற்றைச் செய்து வரும் சாதகர்கள் சரியாதிகளை விட்டு நீங்கித் தற்போதத்தை அடக்கி அருட் போதத்தை முன்னிட்டுச் செல்லப் பழகினால் இதுவே அவர்களைப் பேரின்பத்தில் ஆழ்த்தி விடும். இதற்கு ஒரு காரணமும் கூறுவர். கரும்பு விளைந்த நிலத்தின் மண்ணைப் பற்களால் கடித்து வாயில் புரட்டி இன்பம் பெற நினைப்போர்க்குச் சர்க்கரை தானே வந்து அவர் வாயில் தோன்றினால் எப்படி மகிழ்வரோ அப்படித் தற்போதத்தை விட்டு அருட் போதத்தை முன்னிட்டுச் செல்வாரும் வீட்டின்பம் கண்டு இன்புறுவர்.

இந்நூலை ஆக்கியோர் பெயர் கண்ணுடைய வள்ளல் என்பதாம். இந்நூலைப் பெரிதும் பாராட்டிய பெரியோருள் ராமலிங்க வள்ளலாரும் ஒருவர்.

பகவான் அடிக்கடி மேற்கோள்காட்டும் பாடல்களில் சில ரிபுகீதை என்னும் நூலில் உள்ளவை. ஒருமுறை சூரிநாகம்மா பிரார்த்தனைக் கூடத்தை வலம் வருவதைக் கண்டு பகவான் "இது போன்றவை தேவை இல்லை." ரிபுகீதையில்"பிரம்மாண்டங்கள் எல்லாம் என்னிடத்தே சுழல்கின்றன" என்று தியானம் செய்யப் பழகியோர் பற்றிப் பேசப்படுகிறது. "இத்தகைய தியானம் செய்து பழகியோர்க்குக் கூடத்தை வலம் வருதல் தேவை இல்லை" என்றாராம். பாடல்:

பூரணவா நந்தான்மா வகமென் றெண்ணல்
புகழ்புட்பாஞ் சலியாகு மநந்த கோடி
காரியமாம் பிரமாண்ட மென்னி டத்தே
கற்பிதமாய்ச் சுழலுமெனுந் தியானந் தானே

*நேரதுவாய் வலம்வரலா மென்று மென்னை*
*நிகிலருமே வந்திப்பார் நானெப் போது*
*மாரையுமே வந்திக்கே னென்னுந் தியான*
*மான்மமகா லிங்கத்தின் வணங்க லாமே. (3-39)*

இதன் பொருள் எளிதாக விளங்கக் கூடியது. ஆன்மாவின் தொடர்பாகச் செய்யும் விசார வழியான ஒவ்வொன்றும் பூசனை, பிரதட்சிணம், லிங்க வழிபாடு என்பவையாகின்றன என்பது ஞானமார்க்கத்தின் தனிச் சிறப்பாகும்.


ஞானப் பெருவழியின் முக்கியக் கோட்பாடுகளில் ஒன்றாகிய "எல்லாம் தானே" என்பதை ரிபுகீதை பாடல் தெளிவாக்குகிறது. பாடல் இதுவே:

*சித்தினிடைக் காண்கின்ற செகசீ வாதி*
*சித்துருவாம் பிரமத்துக் கயலே யாகா*
*தத்திறமாம் பிரமத்துக் கயனா னாகே*
*னவ்விதமா மெனக்கயலும் பிரம மாகா*
*தெத்திறமாந் தோற்றமுமே பிரம மென்று*
*மிருமையுறா வப்பிரம நானே யென்று*
*மத்துவிதா கண்டபரப் போதந் தன்னை*
*யடைந்ததனாற் பவபாச முக்த னாவாய். (11-31)*

இப்பாட்டில் அத்துவித அகண்ட பரபோதம் மிகச் சிறப்பான எளிய முறையில் விளக்கப்பட்டிருத்தலை நுகர்ந்து இன்புற வேண்டும்.

அடுத்து மகாராஜா துறவு என்னும் அழகிய நூல். இதனை இயற்றியவர் பழமலை குமார தேவர் ஆவர். பழமலை என்பது இன்று விருத்தாசலம் என்று வழங்கப்படுகிறது. இந்த நூலாசிரியர் பழமலையில் கோயில் கொண்டுள்ள பெரிய நாயகியின் பூரண அருளைப் பெற்றவர். இது இவர் இயற்றிய புகழ்பெற்ற அத்துவித நூல் ஆகும். மகாராஜா துறவு என்ற நூலிலிருந்து இரு பாடல்களை இங்கு ஆராய்வோம்.

*தன்னையேயன்றி யொன்றுந் தானுதியா விடத்தின்*
*மின்னையே யொத்தவைய மித்தைகற்பிதம தென்றும்*



பொன்னையேயன்றிவேறுபூடணமிலதுபோல
என்னையேயன்றியொன்றுமில்லெனத்தேர்ந்தான்வேந்தன்
- *(66)*

சாந்தோக்கிய உபநிடத்தில் வரும் உதாரணத்தைப் பயன்படுத்தித் தங்க நகைகள் தோற்றத்தில் வேறுபட்டாலும் எல்லாம் அடிப்படையில் பொன்னே என்பதுபோல உலகில் உள்ளவை எல்லாம் தோற்றத்தில் வேறுபட்டாலும் அனைத்துமே என் ஆன்மா ஆவன, என்னையன்றி உலகில் வேறு எதுவும் இல்லை என்ற கோட்பாட்டினை அழகுற இங்கே காட்டுகின்றார்.

இதனின்றும் அடுத்தபடியாக, உலகினை வேறாக உணர்ந்திடில் பந்தமாகும். உலகினைத் தானேயாக உணர்ந்திடில் முக்தியாகும்.

இங்கிடத் தோன்றல் எல்லாம் என் நினைவே
என்றெண்ணி இங்கிடக் கண்டு வேறு அற்று
இருந்தனன் இளமை வேந்தன்.

என்று பாடுவார். எல்லாம் ஆன்மாவே, மாயையின் காரணமாக அவை வேறு வேறாகத் தென்படுகின்றன என்று முதலில் காட்டினார். இந்தப் புற வேற்றுமையைக் கண்டு ஏமாறாமல் அகத்தே அவை

எல்லாம் ஒன்றாக, ஆன்மாவாக இருத்தலை உணர்ந்து கொண்டால் அவனை பவக் கடலில் அழுத்தும் வினை அழிந்துபோய் விடுகிறது. அவன் வீடு பெறுகின்றான். இந்த வேறு அற்ற நிலைமையே அத்துவிதத்தின் சிறப்புக் கூறு ஆகும். இதனைச் சிறப்பாக எளிய அழகிய தமிழில் விளக்கும் இந்நூல் அத்துவித சாத்திரத்தைக் கற்க விரும்புவோர்க்கு ஓர் அரிய பொக்கிஷமாகும்.

அடுத்ததாக நாம் ஆராயப் புகுவது கீதாசாரத் தாலாட்டு என்னும் அளவிற் சிறிய நூலாகும்.

இது அளவிற் சிறியதே என்றாலும் அத்துவித தத்துவத்தைத் தெளிவுற விளக்கும் அழகிய காவியமாகும். இதை இயற்றியவர் திருவேங்கடநாதர். இவர் கண்ணனையே பரப் பிரம்மமாக வழிபடுபவர். மதுசூதன சாஸ்திரி என்ற பெரும்புகழ் படைத்த அத்துவித ஆசாரியனும் கண்ணனையே பரப் பிரம்மமாக வழிபட்டவரே. நிர்குணப் பிரம்மத்தையே காட்டும் அத்துவிதத்தில் சிவனுக்கும் திருமாலுக்கும் வேறுபாடு இல்லை. சிவனையே பரப்பிரம்மாக வணங்கிய அப்பைய தீட்சிதர் போன்ற அத்துவிதவாதிகளும் கண்ணனையே தியானித்துப் பயன்பெற்ற மதுசூதன சாசுவதி, திருவேங்கடநாதர் போன்றோரும் இருப்பதை நாம் உணர வேண்டும். அத்துவிதத்தில் சிவன் வேறு திருமால் வேறு என்ற பிணக்குக்கு இடமே இல்லை.

எது பந்தம் எது பந்தம் அறுத்த நிலையில் கிடைக்கும் முக்தி என்ற கேள்விக்கு இந்நூல் நேரடியாக விடையளிக்கிறது.

தேகாதி தான் எனவே சேர் அபிமானங்கள் பந்தம்
ஆகாத மானம் வீடில் அரிய முக்தி என்றவரோ

நான் என்பது உடலைக் குறித்தது என்ற தேஹாத்ம பாவம் தான் பந்தம் என்பது. இது நீங்கிவிடில் முக்தி என்பது அத்துவிதத்தின் திரண்ட கருத்து.

*அடுத்துச் சீடர் குருவைக் கேட்பார்:*

*நெடுங்காலம் ஆன்மாவை நீங்காத அஞ்ஞானம்*
*விடுங்காலம் எந்நாளோ மெய்ஞ்ஞானத்தால்*

எனவே இது பலருக்கும் தோன்றக் கூடிய ஐயமே. இதற்கும் 'பளிச்' என்று விடை கிடைக்கிறது.

*அந்தகாரம் குகையில் ஆயிரம் நாள் இருந்தாலும் செந்தீபம் கண்டவுடன் தீர்வதுபோல் என்றவரோ.*

பல ஆண்டுகள் பூட்டிக் கிடந்தால் மூண்டிருந்த இருள் மின் விளக்கின் சுவிட்சைத் தட்டிய கணத்திலேயே நீங்குவதுபோல் பிரம்மஞானம் ஏற்பட்ட கணமே அஞ்ஞானம் முழுவதும் அறவே அழிந்துவிடும்.

உலக வாழ்க்கையைக் கனவு என்று அத்துவிதம் கூறும். இதைக் குறித்த பொருத்தமான ஓர் ஐயம் எழுப்பப்படுகிறது.

*கனவு போல் பிரபஞ்ச மென்றீர், கண் விழித்தால் கனவு பொய்யாம்*
*வினவு சகம் நுணமும் மெய்யா விளங்குவது என் சொல்லும் என*

இதற்குத் தெளிவான விடை அடுத்த பாட்டில்:

*மெய்யாக விளங்குவது மெய்ஞ்ஞானம் வருமளவும்*
*பொய்யாம்பின் கனவதுயால் போதம் வரில் என்றவாரோ*

மெய்ஞ்ஞானம் வரும்வரை உலக வாழ்க்கை மெய்போலத் தோன்றும், கனவு காணும்போது அதுவே நனவு என்று தோன்றுவதுபோல மெய்யான பிரம்மஞானம் தோன்றிய பின், அதுவரை வாழ்ந்த வாழ்க்கை கனவு போன்றது, பொய்யானது என்பதை உணர்வோம்.

பேத உணர்வு, ஐக்கியம் பற்றிய வினா விடைகள். *வினா:*

*சீவனது தான் என்றும் சேரும் பிரம மென்றும் ஆவதுவோ பேரின்பம், ஆங்கு அது எனக்கு ஏதும்*

என இதற்கு விடையாகச் சீவப் பிரம்ம ஐக்கியம் கூறப்படுகிறது.

ஏகம் பிரமம் இரண்டிலை நீ வேறும் அல சோகமுறும் பேதம் அதில் தோன்றும் இன்பம் என்றவரோ இந்தச் சோகமுறும் பேதமே உலகின் எல்லாத் துயருக்கும் அடிப்படைக் காரணம் என்பதை உணர்ந்து விட்டால் அது முறிந்து போக, ஐக்கிய உணர்வு தோன்றிவிடும். இன்று பலவகையான பேத உணர்வுகளே மனித குலத்தை அழிக்கவல்ல பயங்கரமான பேய் வடிவமெடுத்து உலாவுதலை நாம் அறிவோம். அத்துவிதம் புகட்டும் ஐக்கிய உணர்வை நாம் ஏற்றுக் கொண்டு நடக்கத் தலைப்பட்டால், "மண்ணில் தெரியுது வானம்" என்று பாரதி சொன்னபடி மண்ணும் விண்ணாக உருவெடுக்கும். நம் வாழ்க்கையில் தோன்றித் தீராத துயரைத் தரும் எல்லாப் பிரச்சனைகளும் தீர்ந்துவிடும். வாழ்க்கை இன்பமயமாகி விடும்.

அத்துவித வேதாந்தத்தை விளக்கும் நூல்கள் ஒருகாலத்தில் தமிழில் இல்லாமலே இருந்தது பெருங்குறையே. இதனை உணர்ந்து சுமார் 350 ஆண்டுகளுக்கு முன் தத்துவராய சுவாமிகள் மோகவதைப் பரணி போன்ற 18 முதல் நூல்களையும் பிரம்ம கீதை போன்ற சில மொழிபெயர்ப்பு நூல்களையும் ஆக்கித் தந்தார்கள். அவர்களுக்குப் பிறகு தாண்டவராயர் போன்றவர்கள் சில நூல்களை இயற்றித் தொண்டாற்றினார்கள். வடமொழியில் உள்ள நூல்களைப் பொருள் தெரிந்து படிக்க முடியாதவர்கள் தமிழில் உள்ள இந்நூல்களைப் படித்துப் பயன் பெறலாம் என்றே பகவான் ரமணர் இவற்றிலிருந்து மேற்கோள்களைக் காட்டிப் பொருள் விளக்குவர். அவர் வழியில் சென்று நாமும் இந்தத் தமிழ் வேதாந்த நூல்களைப் பயின்று பெரும் பயன் அடைவோமாக.

நிறைவுற்றது.

# அகம் புகுந்த அண்ணல்

**சேலம் சேதுகுமாரன்**

*அகம்புகுந்து ஈர்த்து உன் அககுகை சிறையாய்*
*அமர்வித்தது என்கொல் அருணாசலா*

*அக்ஷரமணமாலை 3ஆவது பாடலில் வியந்து பாடுகிறார் பகவான். "அருணாசலா! என்னுடைய அக வீட்டில் புகுந்து என்னை ஈர்த்துக் கொண்டுவந்து உன் இதயமாகிய குகையில் இருந்து தப்பிக்க முடியாடபடி இருத்தி வைத்துக் கொண்டாய்! உன் அருள் விசித்திரம்தான் எத்தனை அற்புதம்! என்று வியக்கிறார் பகவான்.*

*பாமர மக்களாகிய நாம் வழக்கமாக எண்ணுவது யாதெனில், "நாம் பகவானிடம் எவ்வளவு பக்தியுடன் இருக்கிறோம்! ஆனால் அவனோ நம்மிடம் அலட்சியமாக இருக்கிறான்! நம்மைத் துன்பங்களில் இருந்து காக்கவேண்டும், எல்லாத் துன்பத்திலும் பெரிய துன்பமாகிய பிறவித் துன்பத்திலிருந்து காக்கவேண்டும் என்ற எண்ணமே அவனுக்கு இல்லையே!" என்று வருந்துகிறோம்.*

*உண்மை அதுவா! இல்லவே இல்லை. எப்போது நம்மை அடியான் கூப்பிடுவானோ நினைப்பானோ என்று ஆவலுடன் காத்துக்கொண்டு இருக்கிறான் இறைவன். நாம்தான் அவனை அழைப்பதோ, நினைப்பதோ இல்லை. பல பிறவிகட்குப்பின், ஏதோ ஒருநாள் அவனை அகஸ்மாத்தாக நினைக்கத் தொடங்கிய மாத்திரத்திலேயே ஆவலுடன் காத்திருந்த இறைவன் உள்ளத்தில் வந்து புகுந்து நிரந்தரமாகக் குடிகொண்டு விட்டானாம்! திருமங்கையாழ்வார் பாடலில்,*

*வந்து உனது அடியேன் மனம் புகுந்தாய் புகுந்ததன் பின் வணங்கும்*
*என் சிந்தனைக்கு இனியாய் திருவே என் ஆருயிரே*
*- (ஸ்ரீபெரிய திருவாய்மொழி, 3-5-1)*

என்று உருகுகிறார். 'மனதில் வந்து குடிகொண்டாய்' என்று பாடவில்லை. 'மனம் புகுந்தாய்' என்று பாடுகிறார். 'புகுதல்' என்றால் அழையாமலேயே வந்து உள்ளே அமர்வது என்று பொருள். 'புகுந்தபின், நான் வணங்குதற்கு இனியவன் ஆனாய்!' என்கிறார் ஆழ்வார்.

ஏன் தெரியுமா? அவன் அழைக்காமலேயே, வந்து உள்ளே புகுந்து விட்டான். சாதுக்கள் உள்ளத்தில் இருக்கும் விலைமதிப்பற்ற ரத்தினமாகிய ஆத்மஞானத்தினைத் திருடுவதற்காக ஐந்து திருடர்கள் வரப்போகிறார்கள் என்று இறைவனுக்குத் தெரியும். ஐந்து இந்திரிய நுகர்ச்சிகள் என்போர்தான் அந்தப் பெரும் திருடர்கள். அந்தத் திருட்டினின்றும் நம் ஞானத்தைப் பாதுகாப்பதற்காகத்தான் அருணாசலன் முன்பேயே புகுந்து அங்குக் காவல் காத்துக் கொண்டு இருக்கிறானாம்!

*ஐம்புலக் கள்வர் அகத்தினில் புகும்போது*
*அகத்தினில்நீ இலையோ அருணாசலா*
*- (மணமாலை 11)*

என்று வியக்கிறார் பகவான்

இந்த ரமண பகவான் என்னுடைய கர்ம வினைகளைக் களைவதற்காக, தானே என்னைக் கூவி அழைத்து வந்த பேரருளை வியக்கிறார் முருகனார்.

*பாவியேனுடைய பழவினை ஒருங்கே*
*பற்றுஅறச் செற்றிடப் பரிந்து*
*கூவியே என்னைக் குடிமுழுதாண்ட*
*குருவர ரமண மாதேவே!*
*- (ரமண சந்நிதிமுறை, 223)*

என்று வியக்கிறார் முருகனார்.

மேலும் "நான் அகங்காரத்தால் தூண்டப்பட்டு எனது அறிவு விழி குருடு ஆகி, ஆத்ம விசாரம் கொண்டு உள்ளே திரும்பி நோக்காமல், வெளிஉலகப் பொருட்களிலும் மனத்தைச் செலுத்தி, அதனால் மாண்பு அழிந்து தவிக்கும்போது பரிவுடன் என்னை நாடிவந்து என்னை ஆண்டாய்" என்று பாடுகிறார்.

'அகம் அகம்' என நான் அகங்கரித்ததனால்
அகவிழி குருடுபட்டு அடியேன்
பகிர்முக நோக்கால் பரிதவிக்கும்கால்
பரவுளம் காட்டிவந்து ஆண்டாய்

- (ஸ்ரீ ரமண சந்நிதிமுறை 249)

என்று இறைவன் தானாகவே என் துயர் நீக்கத் தன்னை நாடி வந்தமையைப் பாடுகிறார்.

அடியார் உள்ளத்தே அவர்களைக் காக்க வேண்டிப் புகுந்த இறைவன், வைகுந்தம், பாற்கடல், கைலாசம் எல்லாவற்றையும் விட இதுவே சிறந்த இடம் என்று அடியார் உள்ளத்திலேயே தங்கி விட்டானாம்! இதனை அழகுற திருமங்கை மன்னன் பாடுகிறார்.

கல்லும் கனைகடலும் வைகுந்த வான்நாடும்,
புல்லென்று அழிந்தனகொல் ஏ பாவம்,-வெல்ல
நெடியான் நிறம்கரியான் உள்புகுந்து நீங்கான்,
அடியேனது உள்ளத்து அகம்.

- (நாலாயிர திவ்யப் பிரபந்தம், 2652)

முருகனாரும் தாம் பகவானைப் பற்றி எழுதிய முதல் பாடலிலேயே எங்ஙனம் இறைவன் இதேபோன்ற கைலாயத்தை விட்டு, என் எளிய பிரார்த்தனை கேட்டு என்னிடம் வந்து சேர்ந்தான் என்பதைக் குறிப்பிடுகிறார்.

பார்வளர் கயிலைப் பருப்பத நீங்கிப்
    பண்ணவர் சூழலை விட்டு
வார்ஒளி மணிபோல் வாசகர் வாக்கை
    வளர்செவி மடுத்திட விரும்பி
ஏர்வளர் பெருந்தண் துறையடைந் தாற்போல்
    இழிசினேன் புன்சொலும் வேட்டுச்

*சீர்வளர் அருணைச் செழும்பதி சேர்ந்தாய்*
*தேசிக ரமணமா தேவே.*

*- (ஸ்ரீ ரமண சந்நிதி முறை, 184)*

*"ரமண மஹா தேசிகனே! சிவபிரான் ஆயினும் தேவர்கள் இசைபாடுகின்ற கைலாயத்தைவிட்டு, அவர்களைவிடச் சிறப்பாக மாணிக்கம்போல் ஒளிரும் மணிவாசகர் பாடலைக் கேட்பதற்காகத் திருப்பெருந்துறைக்கு வந்தான். நீயோ, சற்றும் தகுதியற்ற என்னுடைய இழிந்த பாடலைக் கேட்க விரும்பி அருணையம்பதி நாடி, என்னுள் வந்தாயே" என்று உருகிப் பாடுகிறார்.*

*இப்படி இறைவன் உள்ளத்தே புகுந்து குடிகொண்டதை அடியார்கள் பலவாறாகப் பாடுகின்றனர்.*

*உலவு திரைக்கடல் பள்ளிகொண்டு*
*வந்துஉன் அடியேன் மனம்புகுந்த*
*அப்புலவ! புண்ணியனே*

*என்பது மங்கை மன்னன் பாடல்.*

*"வந்தவன் ஏன் திரும்பிப் போகாமல் என்னுள்ளேயே தங்கிவிட்டான் தெரியுமா?" இதற்கும் விடை வைத்துள்ளார் ஆழ்வார்.*

*நென்னல் போய்வரும் என்றுஎன்று*
*எண்ணிஇராமல் என்மனத்தே புகுந்தது*
*இம்மைக்கு என்று இருந்தேன்*

*- (பெரிய திருமொழி, திவ்யார்த்த தீபிகை, 3-5-3)*

*"பெருமான் நேற்று வந்துவிட்டுப் போய்விட்டான். இன்று வருவானோ, நாளை வருவானோ? என்று எண்ணி என்னைத் தவிக்க விடாமல் என் நெஞ்சிலே புகுந்து இப்பிறவி முழுதும் விட்டு விலகாமல் என் உள்ளேயே தங்கி இருக்கிறான்" என்பது ஆழ்வாரின் உறுதிப்பாடு.*

*காந்தம் இரும்புபோல் கவர்ந்தெனை விடாமல்*
*கலந்துஎனோடு இருப்பாய் அருணாசலா*

*- (மணமாலை, 16)*

*என்று தன்னிடம் வந்து என்றும் நீங்காமல் அத்வைதமாய் உடனிருக்கும் நிலையைப் பகவான் புகழ்கிறார்.*

*உள்ளே புகுந்து குடிகொண்டது மட்டுமல்ல! இதுநாள்வரை பலகாலமாக என்னைப் பிடித்துக் கொண்டிருந்த அகந்தைப் பேய் நீ உள்புகுந்தவுடன் என்னை விட்டு ஓடிவிட்டது. நீ விடாமல் என்னைப் பரம்பொருளான பேயாய் விடாமல் பிடித்துக்கொண்டு என்னையும் உருவற்ற பேய் ஆக்கி விட்டாய்" என்கிறார் பகவான் (மணமாலை, 71)*

*ஆழ்வாரின் அனுபவமும் இஃதே.*
*வந்தநாள் வந்து என் நெஞ்சிடம் கொண்டான்*
*மற்றோர் நெஞ்சுஅறியான் அடியேனுடைச்*
*சிந்தையாய் வந்து தென்புலர்க்கு என்னைச்*
*சேர்கொடான் இனிது சிக்கெனப் பெற்றேன்.*

*- (மூன்றாம் திருமொழி, 1570)*

*மற்றும்*

*தாய்நினைந்த கன்றே ஒக்க என்னையும்*
*தன்னையே நினைக்கச்செய்து தான் எனக்கு*
*ஆய்நினைந்து அருள்செய்யும் அப்பன்*
*என்று என்பு உருகப் பாடுகிறார்.*

*தன் உள்ளே புகுந்து வலிமையுடன் ஈர்த்துக்கொண்டு, பரமபதத்தில் தன்னைச் சேர்ப்பித்த அருட்செயலுக்கு ஈடு உண்டோ?*

*வீடுவிட்டு ஈர்த்துஉள வீடுபுக்குப் பையஉன்*
*வீடுகாட்டினை அருள் அருணாசலா*

*- (மணமாலை, 97)*

*இதுவரை மனச் சலனங்களால் ஓடிக்கொண்டு இருந்த ஜீவன் ஒருமுறை நினைத்த உடனேயே அந்த ஜீவனின்*

*மன அலைச்சல் ஒடுக்கி, தன்முன் ஈர்த்து வந்து, அதனைத் தன்போலவே சலனமற்ற பரமாத்ம ஸ்வரூபமாகச் செய்து அந்தப் பரிபக்குவப்பட்ட ஜீவனை உணவாக உண்டுவிடுகிறது இந்த அருணாசலம் என்று வியக்கிறார்.*

*பருவதம் ஒருதரம் இதனை*
*ஓர்த்திடும் உயிரின் சேட்டையை ஒடுக்கி*
*ஒருதனது அபிமுகமாக*
*ஈர்த்து அதனைத் தன்போல் அசலமாச் செய்து*
*இன்னுயிர் பலிகொளும்*

*- (ஸ்ரீஅருணாசல பதிகம், 10)*

*மணிவாசகரும் இறைவன் தன்னை நாடிவந்து உள்புகுந்து அருள் செய்தமையைப் பாடுகிறார்.*

*நானேயோ தவம் செய்தேன்? 'சிவாய நம' எனப்*
*பெற்றேன்?*
*தேன் ஆய், இன் அமுதமும் ஆய், தித்திக்கும்*
*சிவபெருமான்*
*தானே வந்து, எனது உள்ளம் புகுந்து, அடியேற்கு அருள்*
*செய்தான்*
*ஊன் ஆரும் உயிர் வாழ்க்கை ஒறுத்து அன்றே,*
*வெறுத்திடவே!*

*- (திருவாசகம், திருஏசறவு)*

*"நான் ஒருதவமும் செய்யவில்லை. 'சிவாய' என்று மட்டும் ஒருதரம்தான் சொன்னேன். அதற்காகவே காத்திருந்த அவன் உடனே வந்து என் உள்ளம்புகுந்து கொண்டான். இதுவரை எனைப் பற்றியிருந்த உலகம் பொருள் தொடர்பான வேட்கை எல்லாம் உடனே மறைந்துபோய் நான் அவனில் கரைந்தேன்" என்கிறார் மணிவாசகர்.*

*என் இதயத்தே வந்து குடிபுகுந்த அவன் அங்கே சும்மா இருக்கவில்லை. இடைவிடாது எனக்குப் பேரின்பத்தை வாரிவாரி வழங்கிக்கொண்டே இருக்கின்றான் என்கிறார் நம்மாழ்வார்.*

*அல்லும் நன்பகலும் இடைவீடின்றி*
*நல்கி என்னை விடான் நம்பிநம்பியே*

பகவான் மிகவும் விரும்பிய நூல்களில் ஒன்று நம்மாழ்வாரின் திருவாய்மொழி. அந்தத் திருவாய்மொழியின் மிகச் சிறந்த பாடல் ஒன்று இறைவன் உட்புகுந்த எழிலைச் சிறப்புற வர்ணிக்கிறது.

*எனக்கே ஆட்செய் எக்காலத்தும் என்று, என்*
*மனக்கே வந்துஇடை வீடின்றி மன்னி*
*தனக்கே யாக எனைக் கொள்ளு மீதே*
*எனக்கே கண்ணனை யான்கொள் சிறப்பே*

- (நாலாயிர திவ்யப் பிரபந்தம், 3102)

கண்ணனைத் தனக்கே தனக்கு மட்டும் வேண்டும் என்று ஆழ்வார் விரும்பினார். அவரது ஆசை நிறைவேறிய விதம் விசித்திரமானது. கண்ணன் ஆழ்வாரின் உள்ளத்தே வந்து அமர்ந்து கொண்டான். "நீ எனக்கு மட்டுமே சொந்தம்" என்று ஆழ்வாரைப் பணி கொண்டான். அவர் உள்ளத்திலிருந்து வெளியேறாமல் அங்கேயே நிரந்தரமாகத் தங்கி விட்டான். ஆழ்வார் தமக்காகக் கண்ணனைக் கொண்ட முறை இது.

இடைவீடின்றி, என்ற சொற்பிரயோகம் மிகவும் அழகானது. மனத்தில் கொஞ்சம் இடைவெளி விட்டிருந்தாலும் உலக ஆசை அங்கே வந்து உட்கார்ந்து விடலாம். எனவே அடியார் மனதில் சிறிதும் இடைவெளி இல்லாமல் முழு மனத்தையும் இறைவன் ஆக்கிரமித்து இருந்ததால் வேறு யாரைப் பற்றியும் எதைப் பற்றியும் அவர் நினைக்கவே இடமில்லாமல் போயிற்று.

'நாடி வந்து என்னை நயந்துகொண்டு ஆண்ட நாயகர்' என முருகனாரால் பாடப்பெறும் பகவான் இங்ஙனம் தானே வந்து அடியார் உட்புகுந்து ஆண்ட அருட்திறம் அளவிடற்கரியது அன்றோ!

# ரமண வழி வெண்பாக்கள்

## க்ரேஸி மோகன்

*பித்துவிட்டு எனைப் பித்தனாக்கினை*
*பித்தம் தெளிமருந்து அருணாசலா*

*என்று பாடுகிறார் பகவான். கோணலான உலகப்பற்றுகளை விட்டு விட அருளி, ஏன் உன்மீது பெரும் காதலாம் பித்தினைக் கொள்ளச் செய்தாய். இந்தப் பித்து, உலகப்பற்று போன்ற கோணலான பித்து அல்ல. இது நேரான பித்தாகிய கடவுட் பற்று. என்றும் எல்லாப் பற்றையும், இறைவன்மீது கொண்டுள்ள தீராத பக்தியைக்கூட, விட்டுவிட்டால் தானே ஆத்ம சாட்சாத்காரம் வரும்?*

*"ஈசனோடு ஆயினும் ஆசை அறுமின்கள்" என்பது திருமூலர் வாக்கு அல்லவா? அந்தப் பித்தினைப் போக்க, உன் அருளைத் தருவாய் என்பது ரமண நாயகியின் பிரார்த்தனை.*

*பகவான்மீது இதுபோன்று பெரும்பித்து நேர்பித்து கொண்டவர் க்ரேஸி மோஹன்.* He is crazy about Bhagavan. *கல்வியினால் பொறியாளர் ஆகி, ஆற்றலினால் எழுத்தாளர் ஆகி, திறமையினால் நாடக நடிகர், ஆக்குவோன் ஆகி, பகவான்மீது கொண்ட பிரவாகமான பக்தியினால் வெண்பா கவிஞனாகிச் செயல்படும் க்ரேஸி மோஹனது அற்புதமான வெண்பாக் களஞ்சியத்தில் ஒரு பகுதி இந்த ரமண வழி வெண்பாக்கள். விளக்கமே தேவையின்றி ரமண வழியை செறிவு மிக்க வெண்பாக்களில் படைத்திருப்பதை இப்போது காண்போமா! - ஆசிரியர்.*

*உடலுயிர் நானா? உணர்ச்சிகள் நானா?*
*நடைமுறை வாழ்க்கையில் நானார்? - திடமாய்க்*
*குடைந்த மனமாம் குகைதனில் ஆன்மா*
*கடைந்த நவநீதம் காண்* (1)

*(நவநீதம்=வெண்ணெய்)*

*மருந்துண்ணும் வேளை குரங்கெண்ணம் கொள்ளும்*
*விருந்துண்ணச் சொன்னால் விலகிப் - புறம்சென்று*
*இஷ்டமில்லா தோரிடம் ஏந்திப் பிழைத்திடும்*
*துஷ்டநெஞ்சை தூர விரட்டு* (2)

*ஆழ்ந்த உறக்க மதிலே அமைதியாய்*
*வாழ்ந்து களிப்பவன் யாரென்று - தாழ்ந்து*
*அகங்காரம் விட்டந்த ஆன்மனைத் தேடி*
*சுகம்காணும் நாள்வரை சுற்று* (3)

*எமனை எதிர்த்து மரணம் அளித்த*
*ரமண ரகசியம் கற்றோர் - அமண*
*உலகிலே ஆன்ம உடையணிந்து வாழ்வர்*
*அலகிலா இன்பம் அடைந்து* (4)

*(அம்மண=நிர்வாணமாய், ஆடையற்ற நிலையில்; அலகிலா=எல்லை இல்லாத)*

*நோய்நாட வேண்டாம் அதன்முதல் நாடவேண்டாம்*
*ஆய்வாம் ரமண வழி ஆன்மீகம் - ஓய்வாம்*
*மருந்தால் உடலின் மயக்கம் விலக்கும்*
*விருந்தாம் உணர்வை வடித்து* (5)

*சொப்பனத்தில் கண்ட சொகுசான தூக்கமது*
*அப்படியே போச்சு அடரமணா! - அப்புறம்*
*எப்படியோ என்னை எவனோ எழுப்பினான்*
*இப்படித் தானா இறப்பு....?* (6)

*காட்சிபல கண்டேன் கண்டதெல்லாம் இல்லையென்று*
*சாட்சி சிரிக்கின்றான் சொல்ரமணா! - ஆட்சி*
*அவனிடமா என்னிடமா ஆராயும் சக்தி*
*எவனிடம் உண்டென்(று) இயம்பு (7)*

*ஈரம் தெரிகிறது ஏதோ இருக்கின்ற*
*சாரம் அறிந்தேன் சரி, ரமணா - தீரம்*
*அளித்திடு ஆழத்தில் ஆன்மாவில் மூழ்கி*
*குளித்திட நானும் களித்து (8)*

*சர்க்கரை தேடிச் சுவைக்கும் எறும்பதின்*
*அக்கறை பொங்க அடரமணா! - அக்கரை*
*சேர்ந்திட வேண்டும்; சுமையாம் மனக்கழுதை*
*தேய்ந்திடச் செய்கட் டெறும்பு (9)*

*(கழுதை தேய்ந்து கட்டெறும்பு ஆவதுபோல், ஆன்ம விசாரத்தில். அகங்காரம் கரைகின்றது)*

*தானே கழுத்தில் தரித்தப்பொன் மாலையை*
*காணோமென் றாளாம் கதைரமணா! - வீணே*
*புதையலைத் தேடிடும் பூதமே மாயை*
*அதையழித்தல் ஆன்ம அடைவு (10)*

*(தொடரும்)*

## சிரஞ்சீவி அத்வைத் ரமணன் உபநயனம் 8-6-2015

*ஸ்ரீரமணாச்ரமத்தின் தலைவர் திரு. வே.சு.ரமணன் அவர்களின் பேரனும் டாக்டர் திரு. வெங்கட் ரமணன் அவர்களின் புதல்வனுமான சிரஞ்சீவி. அத்வைத் ரமணன் உபநயனம் ஆச்ரம வேதபாடசாலையில் 8-6-2015 அன்று சிறப்பாக நடைபெற்றது. திரளாக ரமண அன்பர்கள் மற்றும் உறவினர்கள் கலந்து கொண்டனர்.*

# நான் யார் தெரியுமாவிலிருந்து நான்யாரை வரை

**டாக்டர் ஏ.வி. ராஜகோபாலன்**

*பகுதி 21*

*வேதாந்தி என்பவன் எப்படி இருப்பான் என்பது குறித்து பரவலான சில கருத்துக்கள் உண்டு. அவன் சாமான்ய மக்களுடன் பழக மாட்டான். தனிமையை விரும்புவான். யாரும் எளிதில் அவனை அணுக இயலாது. மற்றவர்களுக்கு எட்டாத ஒரு தனி உயரத்தில் இருப்பான். தூரத்திலிருந்து அவனைப் பார்க்கலாம்; அவன் பேச்சைக் கேட்கலாம்; ஆனால் அவன் நம்மிடமிருந்து வேறுபட்டவன்.*

*ஆனால் இதற்கு வேறுபட்ட ஒரு சித்தாந்தத்தை நமக்குப் படைக்கிறார் திருமூலர் என்கிற மகான். இவர் காட்டும் தத்துவ விறக்கம் வேதாந்தியை நமக்கு மிக அருகே கொண்டு வருகிறது. அது மட்டுமல்ல நம்மையே வேதாந்தியாக மாற்றும் ஆற்றலும் படைத்தது.*

*சாமானியனை தத்துவ உலகத்திற்கு அழைத்துச்செல்ல இவர் காட்டும் வழி அன்பு என்னும் தாரக மந்திரம். இது அனைவருக்கும் சாத்தியமான ஒன்று. பொருளோ, நூலறிவோ இதற்குத் தேவையில்லை. இவர் இயற்றிய நூல் திருமந்திரம். 3000 பாடல்களைக் கொண்டது. இவர் காலம் கி.பி. 8-ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டது என்று தெரிய வருகிறது. இவருடைய கீழ்க்காணும் பாடல் அனைவரும் அறிந்தது.*

*அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலர்*
*அன்பே சிவமாவது ஆரும் அறிகிலர்*
*அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்*
*அன்பே சிவமாய் அமர்ந்திருந்தார்...(270)*

'அன்பு' என்ற சொல் ஆழமானது. பரிணாம வளர்ச்சியில் உயர்வு அடைந்த மனிதனின் ஏற்றத்தைக் குறிப்பது. அன்பே கருணையாகிறது. பக்தி என்ற உணர்வுக்கும் இது உரமாகிறது. அந்த பக்தியின் அறுதிப் பயன் இறைவனை அடைவது. வேதாந்தத்தின் நோக்கமும் அதுவே. இவ்வாறு பண்பட்ட மனதிற்கு பக்தி வேறு. வேதாந்தம் வேறு என்ற நிலைபாடுகள் நீங்குகின்றன.

இந்தியத் தத்துவம் இந்த பக்தி-வேதாந்த நிலையை சற்று தீவிரமாக ஆராய்ச்சி செய்கிறது. இறைவன் இந்தப் பயணத்தின் இறுதியில் அடைய வேண்டியவன் ('பிராப்தம்') என்று முதலில் பார்த்தோம். ஆனால் அனுபவ முதிர்ச்சியில் பார்க்கும் முனிபுங்கவர்கள், இந்தக் கருத்துக்கு மேலும் சற்று ஏற்றம் அளிக்கின்றனர். இந்தப் பாதையே பிரம்மம், அதாவது அடைய வேண்டிய பிராப்த வஸ்து, என்பது அவர் கருத்து.

*தபசா பிரம்மவிஜிஞாசஸ்வ*
*தபோ பிரம்மேதி.*
*(பிருகுவல்லி, தைத்ரீய உபநிஷத்)*
*"தவத்தினால் நீ பிரம்மத்தை அறிவாயாக*

தவமே பிரம்மம்". இது பிருகு முனிவர் பிரம்மத்தில் நாட்டம்கொண்ட தன் புத்திரனுக்கு அளித்த உபதேசம். திருமூலரின் உபதேசமும் இந்த வேதாந்தக் கருத்தின் அடிப்படையில் எழுந்தது. பிரம்ம வேட்கையில் பயணிக்கும் பாதையும், பயணத்தின் முடிவும் ஒரே அனுபவமே. சிவம் என்ற பிரம்மநிலையும், அன்பு என்கிற மனக் கேண்மையும் ஒன்றே என்றும் சத்வ குண வெளிப்பாட்டினை அறியாத மாந்தரே அன்பும் சிவமும்

இரண்டு என்பர். இது தர்க்கத்தின் எல்லையைக் கடந்த உணர்வு. அனுபவத்தால் மட்டுமே அறியக் கூடியது.

இந்த அன்பே சிவம் என்கிற நிலை உயர்ந்த அத்வைத சிந்தனைக்கு முதற்படி ஆகிறது. இந்த அன்பு முற்றிய நிலையில்தான் என்னும் நிலை போய்விடுகிறது. 'தத் த்வம் அசி' என்னும் உபநிஷத நிலையில் மனிதன் முன்னேறுகிறான்.

இது விசிஷ்டாத்வைத தத்துவத்திற்கும் ஏற்றதாக ஆகிறது. சரணாகதி என்னும் கோட்பாடு வைணவ சித்தாந்தத்தில் மிக உயர்வாகப் போற்றப் படுகிறது. இது இறைவனைத் தவிர வேறு கதி இல்லை என்று பக்தர்கள் பரமனின் சரண் பற்றும் நிலை. இதையே ஆண்டாள் திருப்பாவையில் விளக்குவார். இவளுடைய கவிதைப் பாத்திரங்கள் யாவரும் படிப்பறிவில்லாத இடைச்சி மாதர்கள். 'இடக்கை வலக்கை' அறியாத இப்பெண்டிர். அன்பிற்கு மிகச் சிறந்த உதாரணம் ஆகின்றனர். இவர்கள் கண்ணன் பரம்பொருள் என்றுகூட அறியாதவர்கள். அவன் அன்பிற்கு உரியவன் என்ற எளிய, நட்பு கலந்த, பிரேமையே அவர்களின் உள்ளத்தின் கேண்மை. கடைவீதியில் மஞ்சள் வாங்கும்போது, கருநிறத்து மேனியனான கண்ணனை குனியச்செய்து அவர்கள் வாங்கும் மஞ்சள் நல்ல முறையில் பற்றுகிறதா என்று அவன் முதுகில் தேய்த்துப் பரிசோதனை செய்து வாங்குவார்களாம்! அந்த அளவிற்கு அவர்களின் நட்பின் ஆழம் இருந்தது.

கூட்டமாய்ச் செல்லும் கோபியர்கள் நப்பின்னையின் திருமாளிகைக்குச் செல்கின்றனர். அங்கு உறங்கும் அவளை எழுப்பி, "எண்ணெயையும் கண்ணாடியையும் கொடுத்து எங்களுடைய நீராட்டத்திற்கு உறுதுணையாக இருக்க உன் மணாளனை உடனே அனுப்பு" என்கிறார்கள். என்ன உரிமை! இதுவே அன்பு என்னும் பரிமாணத்தின் எல்லை நிலம்.

ஆனால் பாவை நோன்பு நோற்கும் இப்பெண்கள் நோன்பின் இறுதிக் கட்டத்தில் கண்ணன் ஒரு இடையனல்ல; அவன் பரம்பொருள் என்பதையும் உணருகிறார்கள். 27-ஆம் பாசுரம்வரை கண்ணனை உற்ற தோழனாகப் பார்த்து, நோன்பின் பயனாக நல்ல ஆடை, அணிகலன்களை அணிந்து 'மூடநெய் பெய்து முழங்கை வழிவார' உண்டு மகிழும் இந்த இடைச்சியர், அவள் உலகே போற்றும் தெய்வ வடிவம் என்று உணர்கிறார்கள். நாம் பிழை செய்து விட்டோமோ என்ற உணர்வு மேலிடுகிறது.

அறியாத பிள்ளைகள் அன்பினால் உன்தன்னை
சிறுபேர் அழைத்தனவும் சீறி அருளாதே

என்று அன்பின் மிகுதியால் தாங்கள் செய்த பிழை பொறுத்தருள வேண்டுவர். ஆனால் இறைவன் விரும்புவது இந்த அன்பையே. இதுவே ஆண்டான்-அடிமை என்ற தூரத்தை நீக்கி இறைவனை நம்பால் அழைத்து வருகிறது.

இந்த இறைவன்பால் அன்பு வைக்கும் நிலையை சைவ-வைணவ சரித்திரங்களில் பல இடங்களில் பார்க்கலாம். இதற்கும் அடுத்தநிலை - பரமன்மேல் பக்தி என்னும் நிலைநீங்கி பாகவத பக்தியாகப் பரிமளிக்கிறது. மதுரகவி ஆழ்வார், எந்த தெய்வத்தையும் பாடவில்லை. எந்தத் திவ்விய க்ஷேத்திரத்திற்கும் செல்லவில்லை. நம்மாழ்வாரையே தெய்வமாகப் போற்றிய இவர்,

செம்பொன் மாடத் திருகூர்நம்பிக்கு
அன்பனாய் அடியேன் சதிர்த்தேன் இன்றே

என்று ஆழ்வார்க்கே அடியானாகத் தன்னை வெளிப்படுத்துகிறார்.

அன்பு என்பது ஒரு சீரிய பண்பு. தன்னலம் கருதாத அன்பு மனிதனை உய்விக்கும். அவனை ஆன்மீக

வாழ்வில் உயர்த்திச் செல்லும். இந்த அன்பே சிவமாக ஆவதை திருமூலர் வாக்கில் பார்த்தோம். இந்த அன்பின் மிகுதியால் நாவுக்கரசுப் பெருமான், வாழ்வில் அச்சம், கவலை போன்ற உணர்வுகள் நீங்கப் பெற்று, இறைவனையே தன் உறவினனாகக் காண்கிறார்.

திண்ணக் கெடிலப் புலனும்
உடையார் ஒருவர் தமர் நாம்
அஞ்சுவது யாதொன்று மில்லை
அஞ்ச வருவது மில்லை

முழுமுதற் பொருளாக சிவபெருமானே இவருக்கு நெருங்கிய உறவினனாக ஆனதால் லௌகீகமான பயங்கள் எவையும் தன்னை அண்டாது என்று உறுதிபட உரைக்கிறார் வாகீசர். இந்த உறவு அன்பினால் ஏற்படுவது. வெறொரு இடத்தில் இவர் 'நாமார்க்குங் குடியல்லோம் நமனையஞ்சோம்' என்று பக்தியின் உச்ச கட்டத்திற்குச் சென்று பறைசாற்றுவார். அந்த மாபெரும் சக்தியின் காலடியில் மீளா அடிமையாக வீழ்ந்த இப்பெருமானுக்கு வேறு எந்த அச்சமும் இராது போயிற்றோ!

அன்பு வழிகண்டு, இறைவன் பணியில் எந்தவிதப் பேற்றையும் எதிர்பாராமல் தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர் கண்ணப்ப நாயனார். இவர் மனப்பாங்கு தனித்தன்மை வாய்ந்தது. அவன் பரம்பொருள், உயர்ந்த பொருட்களைக் கொண்டு பூசிக்கத்தக்கவன் என்ற உணர்வுகூட இல்லாதவர். இதை மிக அழகாக 'திருத்தோணோக்கம்' என்ற திருப்பதிகத்தில் மாணிக்கவாசகர் தெளிவுபடுத்துகிறார்.

பொருட்பற்றிச் செய்கின்ற பூசனைகள் போல்விளங்கச்
செருப்புற்ற சீரடி வாய்க்கலசம் ஊனமுதம்
விருப்புற்று வேடனார் சேடறிய மெய்குளிர்ந்தங்
கருட்பெற்று நின்றவா தோணோக்கம் ஆடாமோ.

- (திருவாசகம், திருத்தோணோக்கம்-3)

தொன்றுதொட்டு வழிபாட்டுக்கு ஏற்றுக் கொள்ளப் பட்ட திரவியங்களான சந்தனம், நைவேத்தியம், தூயநீர் போன்றவற்றை பக்தர்கள் பயன்படுத்துவர். ஆனால் படிப்பற்ற இந்த வேடர் பயன்படுத்திய பொருட்கள் "செருப்பு உற்ற சீரடி, வாய்க்கலசம், ஊன் அமுதம்" என்ற 'புனிதமற்ற'வையே ஆகும். இந்த எளிய வழிபாட்டினால் ஈர்க்கப்பட்ட சிவபெருமான் அவர் பெருமையை உலகம் அறியச் செய்தார். இவ்வாறு வேடரான கண்ணப்பர் புகழ்பாடிய மாணிக்கவாசகப் பெருமானே என்னப்பனை "அன்பினில் விளைந்த ஆரமுதே" என்று பாடியதும் குறிப்பிடத்தக்கது.

உலகியல் வாழ்க்கையில் அன்பு செலுத்துவது பெரும்பாலும் பலாபலன்களைக் கருத்தில் கொண்டு அமைவது. ஆனால் ஆத்யாத்மிக விஷயத்தில் இருந்து மாறுபடுகிறது. காண்பவன்-காணப்படும் பொருள் என்ற இரண்டும் ஒன்றாகப் பரிமளிக்கின்றன. இந்நிலையில் காணுதல் என்ற செயல் மட்டும் எஞ்சுகிறது. இதனால் எல்லையற்ற பெருமகிழ்வு உண்டாகிறது. இந்நிலை அடையப்பெற்ற வாதவூரார் பெண், ஆண், மற்றும் எல்லா உயிரினங்களும் ஈசனே என்று உணர்கிறார். நிற்பதும் செல்வதும் அவனே. அப்பரம்பொருள் முதலும் முடிவும் அற்றது. தேடத்தக்கதும் அதுவே, என உணர்கிறார் (திருவண்டப்பகுதி, 53-58)

இந்தப் பேரின்ப நிலையை "பூமா" என விவரிக்கும் சாந்தோக்கிய உபநிஷத், இந்த நிலையில் அவன் வேறெதையும் பார்ப்பதில்லை, வேறெதையும் கேட்பதும் இல்லை, ஏன் மற்றெதையும் உணர்வதும் இல்லை" என்கிறது.

"யத்ர நான்யத் பச்யதி, நான்யத் ஸ்ருணோதி
நான்யத் விஜானாத், ஸ பூமா (7-24-1)

இது அளவிற் பெரியது. எல்லையில்லா ஆனந்த ரூபம்.

இதுவே 'அனனிய பாவம்' எனப்படும். இத்தகைய உயர்நிலை ஏன் எளிதில் சித்தியாவதில்லை?

ரமண பகவான் இதற்கு ஒரு நுண்ணிய - இந்தக் காலத்திற்கு ஏற்புடைய - ஒரு காரணத்தைச் சொல்லுகிறார். இது சற்றுக்கூர்ந்து நோக்கத்தக்கது. உலக மாந்தர் எப்பொழுதும் இறந்த காலத்தைப் பற்றி அலசி ஆராய்ந்து "நாம் இப்படி இருந்திருக்கலாமோ? இன்னும் சற்றுப் பொருள் அதிகமாகச் சம்பாதித்திருக்கலாமோ? இன்பத்தைப் பெற்றிருக்கலாமோ?" என்று எண்ணி எண்ணி நிராசைப்படுகிறார்கள். இது அவர்களுக்கு தன்னலத்தைப் பேணும் எண்ணத்தை அதிகரிக்கிறது. பேராசையை ஊட்டுகிறது. "இனிமேலாவது நாம் போராடி அதிகம் பொருள் ஈட்ட வேண்டும்; நாலு பேரைப்போல நன்கு வாழ வேண்டும்" என்ற வெறி உண்டாகிறது. இந்தப் போராட்டம் ரஜோ குணத்தால் அமைகிறது. இந்த "நேற்றிலிருந்து நாளை" என்கிற போராட்டம், நாம் வாழுகின்ற இந்தக் கணத்தை வீணாக ஆக்குகிறது. "எனது-நான்" என்னும் பாவம் எழுச்சி பெருகுகிறது. ரமண பகவானின் வாக்கை நோக்குவோம்.

நிகழ்வினைப் பற்றி இறப்பு எதிர்வு நிற்ப
நிகழ்கால் அவையும் நிகழ்வே - நிகழ்வுஒன்றே
இன்றுஉண்மை தேராது இறப்பு எதிர்வு தேரஉனல்
ஒன்று இன்றி எண்ண உனல்

- (உள்ளது நாற்பது - 15)

இறந்த காலமும் எதிர்காலமும் நிகழ்காலத்தை அடிப்படையாகக் கொண்டவை. நிகழ்காலமே மூன்று காலங்களாக விரிந்து பல பரிமாணங்களை அடைகிறது. இந்த நிகழ்காலத்தில் வாழாமல் இறந்த காலத்தையும் எதிர்காலத்தையும் பற்றியே அலசிக் கொண்டிருத்தல் அறிவுடைமை ஆகாது. இதற்கு ஒரு எளிய உபமானத்தை பகவான் கூறுகிறார். 'ஒன்று'

என்ற இலக்கம்தான் எல்லா எண்களுக்கும் ஆதாரம். அதைப் புறக்கணித்துவிட்டு பிற எண்களைக் கொண்டு கணக்குப் போடுதல் இயலாது. ஒன்று என்ற எண்ணின் விரிவாக்கமே பிற எண்கள் எல்லாம்.

நேற்கு நிகழ்காலமாக இருந்த இந்தக் கணம், இன்று இறந்த காலமாகி விட்டது. இப்பொழுது எதிர்காலமாகத் தோன்றும் கணங்கள் அந்தக் காலகட்டம் நீங்கியவுடன் இறந்த காலமாகிறது.

இந்தத் தத்துவத்தின் பயன் என்ன?

நடந்த-நடக்கப் போவதைப் பற்றியே சிந்தித்திருந்தால் நாம் பற்று என்னும் வலையில் மீண்டும் மீண்டும் விழ நேரிடுகிறது. இறந்த காலத்தில் வாழும் தமோகுணமும் எதிர்காலத்தைப் பற்றிய பேராசையில் உறையும் ரஜோ குணமும், நிம்மதியைக் குலைக்கின்றன. இவை 'நான்' மற்றும் 'என்னுடையது' என்ற இரண்டு சுவர்களின் மத்தியில் மனிதனை சிறைபிடித்து விடுகின்றன. இந்நிலையில் அவன் அன்பு, பரிவு போன்ற உயரிய குணங்களை இழந்து விடுகிறான். என் குடும்பம் - என் சொத்து என்ற இரு பரிமாணங்களில் உழலும் ஜீவன் துன்பம், ஏமாற்றம், மனச் சோர்வு என்கிற 'நெகடிவ்' குணங்களால் ஆட்கொள்ளப்படுகிறான். இதைத்தான் பகவான்,

"நிகழ்வு ஒன்றே, இன்று உண்மை தேராது" என்ற வரிகளால் உணர்த்துகிறார். 'நிகழ்காலமே நம் கையில்' என்னும் எண்ணம் இறந்த கால ஏமாற்றங்களையும், எதிர்கால பயங்களையும் நீக்கி விடுகிறது.

இது வெறும் வேதாந்த விசாரமில்லை. "இந்தக் கணத்தை நன்கு வாழக் கற்றுக்கொள்" என்பது மனோ தத்துவரீதியாக ஏற்கப்பட்ட ஒரு நிலை. மன உளைச்சல், தூக்கமின்மை போன்ற விளைவுகளால் பாதிக்கப்பட்ட இனம் மற்றும் மத்திய வயதுடைய பலருக்கும்

ஏராளமான பொருட்செலவில் வழங்கப்படும் வைத்தியமும் இதுவே.

இதற்கு செலவில்லாத வைத்தியம் திருமூலர் காட்டிய அன்பு வழிதான். இது மமகாரத்தை நீக்க மிகச் சிறந்த வழி. வாழ்வில் குறிக்கோள் அற்று வாழும் பல மாந்தரைப் பார்க்கின்றோம். 'வெந்ததைத் தின்று விதி வந்தால் சாவது' என்று வாழும் மானிடருக்கு அன்பு வழியே வாழ்க்கைப் பயணத்தை இனியதாக்கும்.

இந்த வழியில் நம்மைச் செலுத்த ரமணர் காட்டிய உபதேசம் அருந்துணை புரியும். இறந்த கால இழப்புகள் நம்மைத் துன்பத்தில் ஆழ்த்தும். எதிர்கால எதிர்பார்ப்புகள் நம்மை நிம்மதி இழக்கச் செய்கின்றன. நிகழ்கால நடப்புகளே நம்மை நிதானப்படுத்தும். இதுவே அன்பும் அமைதியும் நிறைந்த வாழ்வுக்கு வழி.

## கிரிவலம் வரும் பௌர்ணமி நாட்கள் - 2015

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஜூலை | 01 | புதன் | காலை 9.35 | 02 | வியாழன் | காலை 8.36 |
| | 30 | வியாழன் | மாலை 6.59 | 31 | வெள்ளி | மாலை 5.15 |
| ஆகஸ்ட் | 29 | சனி | அதிகாலை 3.27 | 30 | ஞாயிறு | அதிகாலை 1.11 |
| செப்டம்பர் | 27 | ஞாயிறு | காலை 11.35 | 28 | திங்கள் | காலை 9.09 |
| அக்டோபர் | 26 | திங்கள் | இரவு 8.29 | 27 | செவ்வாய் | மாலை 6.12 |
| நவம்பர் | 25 | புதன் | காலை 6.42 | 26 | வியாழன் | அதிகாலை 4.19 |
| டிசம்பர் | 24 | வியாழன் | மாலை 6.28 | 25 | வெள்ளி | மாலை 5.19 |

# செய்திகள்

## திருவண்ணாமலை செய்திகள்

### மஹா பூஜை

*அன்னை அழகம்மையின் மகாபூஜை 10/6/2015 அன்று ஸ்ரீரமணாச்ரமத்தில் எப்பொழுதும்போல் சிறப்பான முறையில் நடைபெற்றது.*

*சென்னை ரமண கேந்திரம், குரோம்பேட்டை ரமண மையம், இராமநாதபுரம் முருகனார் மந்திரம் மற்றும் மதுரை ரமண கேந்திரம் ஆகிய இடங்களிலும் இவ்விழா கொண்டாடப்பட்டது. குரோம்பேட்டை ரமண மையத்தில் திரு. அசோகன் மற்றும் சூளைமேடு ரமணன் குழுவினருடன் அனைத்து ரமண அன்பர்களும் திருவாசகம் முற்றுமாக ஓதிமகிழ்ந்தனர்.*

### சென்னை நாரதகான சபா - ரமண சத்சங்கம்

*சென்னை நாரதகான சபாவில் திரு. நொச்சூர் வெங்கடராமன் அவர்களின் பிரவசனம் 5-7-2015 முதல் 11-7-2015 வரை காலை மற்றும் மாலை நடைபெற்றது. காலையில் பகவான் தமிழ்ப்படுத்திய ஆதிசங்கரர் அருளிய ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி ஸ்தோத்திரத்தை விளக்கியும் மாலை பாகவத தரிசனம் பற்றியும் பிரவசனம் நடைபெற்றது. சுமார் 1300 நபர்கள் அமரத்தக்க இவ்வரங்கில் இட நெருக்கடி ஏற்படும் வண்ணம் பக்தர்கள் திரளாகக் கலந்து பயன் பெற்றனர். இருவேளைகளிலும் அன்பர்களுக்கு பிரசாதம் வழங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்ச்சிகளைக் கடந்த 2006 ஆம் ஆண்டு துவங்கி பத்து ஆண்டுகளாக சிறப்பாகத் தனித்து ஒருவராகவே நடத்திக்கொண்டு வருபவர் பேராசிரியர் அனந்தராமன் அவர்கள் ஆவார். பகவான் அருள் இவருக்கு பூரணமாக அமைந்துள்ளதே இவ்வெற்றிக்குக் காரணமாகும்.*

*திரு. நொச்சூர் அவர்களின் காலை பிரவசனத்தின்போது 'நான் இதைத் தவற விடக்கூடாது என்பதற்காகவே காலை நான்கு மணி முதல் விழித்துக் கொண்டிருக்கிறேன்' என்று ஒரு பெண்மணி கூறக்கேட்டேன். இதுவே கலந்து கொண்டவர்கள் அனைவரின் ஸ்திதி ஆகும். எனக்குப் பின்னால் அமர்ந்திருந்த ஒரு வயோதிகர் திருநெல்வேலியில் இருந்து இதற்காகவே வந்திருந்தார். அவர் எங்கே தங்கியுள்ளார் என்ற கேள்விக்கு 'இரவு நேரங்களில் அடுத்து உள்ள ஏதாவது ஒரு கோயிலில் தங்கிக் கொண்டும் இங்குக் கிடைக்கும் பிரசாதத்தை உணவாகக் கொண்டும் பிரவசனம் கேட்பது ஒன்றே குறிக்கோள்' என்று கூறியது நெகிழவைத்தது. இங்கு நடைபெற்ற பிரவசனங்களில் ரமண சத்சங்கம் என்று குறிப்பிடுவதற்குக் காரணமுண்டு. ஏனெனில் திரு. நொச்சூர் வெங்கடராமன் அவர்கள் நொடிக்கொருமுறை பகவான் பெயரை உச்சரித்துக் கொண்டு அவரது தத்துவார்த்த போதனையான 'நான் யார்' என்னும் ஆத்ம தத்துவத்தை விளக்குவது ஒன்றே குறிக்கோளாக தமது பிரவசனத்தை நிகழ்த்துவதேயாகும். அவர் பகவானின் நூல் திரட்டில் இருந்து மேற்கோள்காட்டி விளக்கும் போதெல்லாம் நாம் பாராயணம் செய்யும் அச்செய்யுள் வரிகளில் பகவான் இத்தனை அருமையான தமிழ் வார்த்தைகளால் மேலான தத்துவத்தை குழைத்துக் கொடுத்திருப்பது நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது. 'அறந்தவறாச் சிந்தைசேர் அந்தணர்க்கு அண்ணிக்கும் சிறந்த பரானந்தச் செழுங்கழலோன் சீரை' திரு. நொச்சூர் அவர்கள் ஆயிரக்கணக்கான அன்பர்கள் நிசப்தமாக ஆன்ம ருசியில் திளைக்க செவியில் இசைத்துப் புகட்டுவதன்மூலம் பகவானின் ஆன்ம போதனையை நிலைநாட்டுகிறார். - ஆகுரா*

அருணாசல அக்ஷரமணமாலை பாராயண விழா

*14-6-2015 அன்று நங்கைநல்லூர் அர்த்தநாரீஸ்வரர் திருக்கோயிலில் 100-க்கும் மேற்பட்ட ரமண அன்பர்கள் அக்ஷரமணமாலை பாராயணத்தில் கலந்து கொண்டனர். விழாவினை நங்கைநல்லூர் ரமண சத்சங்கத்தினர் ஏற்பாடு செய்திருந்தனர்.*

## பகவான் ரமணரின் சேவை மையங்கள்

| | | |
|---|---|---|
| ***மைலாப்பூர்*** திரு R. வேங்கடகிருஷ்ணன், ஸ்ரீ ரமண கேந்திரா டிரஸ்ட் | .......... | 24611397 |
| ஸ்ரீ ரமண கேந்திரா டிரஸ்ட் மேலாளர் கண்ணன் | .......... | 9940418375 |
| ***குரோம்பேட்டை,*** *ரமணாலயம்* | .......... | 9444261296 |
| ***கிழக்கு தாம்பரம்*** திரு M.A. ராமசாமி | .......... | 9790873138 |
| ***நங்கநல்லூர்*** திரு S. இராமமூர்த்தி | .......... | 22244667 |
| ***மாம்பலம்*** திரு M.K. வைத்தியநாதன் | .......... | 23716495 |
| ***விருகம்பாக்கம்*** திருமதி கௌசல்யா | .......... | 24790635 |
| ***கொளத்தூர்*** கே.ஆர். கோபாலகிருஷ்ணன் | .......... | 9884355454 |
| ***சூளைமேடு*** திரு V. ரமணன் | .......... | 9444172623 |
| ***புதுச்சேரி*** *ரமண கேந்திரம்* | .......... | 0413-2272141 |
| ***மதுரை*** சோமசுந்தரம் | .......... | 04522348157/2346102 |
| ***இராமநாதபுரம்*** சிரஞ்சீவி | .......... | 9360047936 |
| ***திருச்சுழி*** ஹாலாஸ்ய பட்டர் | .......... | 9442004615 |
| ***மலையாண்டிபட்டினம்*** பாலசுப்பிரமணியம் | .......... | 9965622878 |
| ***பொள்ளாச்சி*** ரமண குமார் | .......... | 9487016880 |
| ***ஒட்டன்சத்திரம்*** வடமலைக்கண்ணன் | .......... | 9842912474 |
| ***பழனி*** என். சோமசுந்தரம் | .......... | 9942327770 |
| ***சேலம்*** குப்புசாமி | .......... | 0427-2295460 |
| ***வந்தவாசி*** டாக்டர் ரவி | .......... | 9787180757 |
| ***மடம்*** சுந்தரமூர்த்தி | .......... | 9942264556 |
| ***திண்டுக்கல்*** பழ. முத்தையா | .......... | 9443070924 |
| ***பூண்டி*** மாரியப்பன் | .......... | 9486576687 |
| ***ஓசூர்*** அசோக்குமார் | .......... | 8643842772 |

Ramanodhayam - Tamil Quarterly, Registered with the Registrar of Newspaper for India. RNI NO.: TNTAM/2001/5542

Printed and Published by: A. Kumar Raja, 20, Alamelu Mangapuram, Mylapore, Chennai 600 004 on behalf of Ramana Kendra Trust, 20, Alamelu Mangapuram, Mylapore, Chennai 600 004

Editor: Dr. S. Ram Mohan

*Printed at:* **Multi Craft,**
9, Appavu Gramani 2nd St.,
Robertsonpet, Mandaveli, Chennai 600 028.



*10-6-2015 புதன்கிழமை ஸ்ரீ ரமணாச்ரமத்தில் நடைபெற்ற*
*மஹா பூஜை (அன்னை அழகம்மை ஆராதனை)*
*காட்சிகள்*




*28-6-2015 ஞாயிற்றுக்கிழமை ஸ்ரீ ரமணாச்ரமத்தில் நடைபெற்ற*
*பசு லக்ஷ்மி ஆராதனை தினக் காட்சிகள்*

Registered with the Registrar of Newspaper for India RNI No.:TNTAM/2001/5542

